மூன்றாவது ஆண்டு
11

ISSN 2792 - 1050

# வெண்ணிலா

காலாண்டிதழ்.
QUARTERLY.

வெண்ணிலா - கவிதை மஞ்சரி.
VENNILA - Poetry Inflorescence.


பேராசிரியர் சி. மௌனகுரு

2024 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 8 ஆம் திகதி பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன் அவர்களது 100 ஆவது அகவைத் திருநாளாகும்... (பக்கம்: 10)
- முனைவர் தி. கமலநாதன்.


முனைவர் தி. கமலநாதன்

எமது சமூகத்திற்காகப் பாடுபட்ட, பணிகள் புரிந்த, உலகில் முன்னுதாரணமாகத் திகழப்பட வேண்டிய பலரது வாழ்க்கை வரலாறுகள் அவ்வப்போது மீட்டிப்பார்க்கப்பட வேண்டியவை... (பக்கம்: 18)
- எழுத்தாளர் ஐ. ஏ. ஸத்தார்.


பேராசிரியர் சு. வித்தியானந்தன்

இஸ்லாம் கவிதைகளை ஆதரிக்கின்றது... (பக்கம்: 26)
- மௌலவி கவிஞர் மருதூர் ஜமால்தீன்.

இதழ்: 11 - ஒக்டோபர் 2023 - விலை: ரூபா. 50/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Jesa Grafix

Graphic Designing & Printing

*No. 289, Main Street, Maruthamunai*

**PHOTOCOPY**
**TYPESETTING**
**GRAPHIC DESIGNING**
**OFFSET PRINTING, LAMINATING**
**BINDING, STATIONARY**
**PHONE CARDS**
**RELOADS**
**&**
**MUCH MORE SERVICES**
**at Cheapest rates.**

**075 656 9393**

**jesagrafix24@gmail.com**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்ணிலா

வெண்ணிலா - கவிதை மஞ்சரி.
VENNILA - Poetry Inflorescence.

காலாண்டிதழ்

ISSN 2792 - 1050

மூன்றாவது ஆண்டு - இதழ்: 11 - ஒக்டோபர் 2023.


வாசிப்பை மேம்படுத்துவதும், புதிய பல கவிஞர்களை உருவாக்குவதுமே எமது நோக்கம்.


**ஆசிரியர்:**
**கவிஞர் எஸ் ஏ கப்பார்**
kavignarsagaffar@gmail.com

**முகவரி:**
**378/2, ஸம் ஸம் வீதி,**
**மருதமுனை - 03 # 32314,**
**இலங்கை.**

**மின்னஞ்சல்:**
vennilakavithaimanjari@gmail.com
**தொடர்பு:**
07 5858 5656 / 077 6968697.
**வட்ஸ்அப்:** 077 6968671.


•••


**Digital Printing:**
S. A. Jezeem, Jesa Grafix,
Main Street, Maruthamunai.

**Information Technology:**
A. G. Afraan Muhammed
(University of Ruhuna.)

**Layout Design:**
S. A. Abdul Gaffar DICP, DIHE & DIEC

**Published by:**
Digital Information System (DIS)


•••

**சந்தா விபரம்:**
தனி இதழ் ரூபா. 50/=
தபாலில் பெற ரூபா. 150/=
ஆண்டுச் சந்தா ரூபா. 600/=

வங்கி மூலம்:
**இலங்கை வங்கி, கல்முனை.**
**கணக்கிலக்கம் 6106068**
**(எஸ். ஏ. அப்துல் கப்பார்)**

**உள்ளே...**


**சிறப்புக் கட்டுரை: [ 10 ]**
- முனைவர் தி. கமலநாதன்

**கட்டுரைகள்: [ 14, 18, 26 ]**
- எழுத்தாளர் காவியன்
- எழுத்தாளர் ஐ. ஏ. சத்தார்
- எழுத்தாளர் மருதூர் ஜமால்தீன்

**முகநூல் பதிவு: [ 17 ]**
- எழுத்தாளர் ஜிஃப்ரி ஹாஸன்

**சிறப்புக் கவிதை: [ 25 ]**
- கலாபூஷணம் பி.எம்.எம்.ஏ.காதர்

**உங்களிடமிருந்து: [ 34 ]**

**மஞ்சரி கவிதைகள்: [ 36 ]**
- ஏ. எம். கஸ்புள்ளா
- பைந்தமிழ்க்குமரன்
- செம்மைத்துளியான்
- Dr. ஜலீலா முஸம்மில்
- வெலிகம ரிம்ஸா முஹம்மத்
- மாஹிறா ஹமீட் அஸ்ஹர்
- அலெக்ஸ் பரந்தாமன்
- நழீம் ஹனீபா
- S. ஹஸீனா ஆதம்பாவா
- கிண்ணியா சபீனா
- ஷியாம்
- முகம்மட் றாபி
- சம்மாந்துறை மஷூறா
- எம். ஏ. மாஹிறா (கலீறா)
- முகம்மது றியால்

**பழத்தவற்றில் பிழத்தவை: [ 54 ]**
- இமையி
- மா. காளிதாஸ்
- பொலிகையூர் கோகிலா

**கவிதைத் தொகுப்புகள்: [ 57 ]**

**அட்டையை அலங்கரிப்போர்:**
- பேராசிரியர் சு. வித்தியானந்தன்
- பேராசிரியர் சி. மௌனகுரு
- முனைவர் தி. கமலநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் நூற்றாண்டு அகவையும் அவர் பணியும்.

1924 ஆம் ஆண்டு மே மாதம் 8 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் தெல்லிப்பழையில் சட்டத்தரணி சுப்பிரமணியத்தின் இரண்டாவது குழந்தையாகப் பிறந்தவர். 1989 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் திகதி தமது 65 வயதை அண்மித்துக் கொண்டிருந்தபோது எம்மை விட்டும் பிரிந்து விட்டார். 65 வருட காலத்துள் அவர் சாதித்தவைகள் எம் கண் முன் சமுத்திரமாகத் தென்படுகின்றது.

எதிரேவரும் 2024 ஆம் ஆண்டு அவர் பிறந்து 100 வருடங்கள் நிறைவுபெறப் போகின்றது. ஆனால், அவர் சாதித்துச் சென்றவைகள் பல நூறு வருடங்கள் பலர் கூடியும் சாதிக்க முடியாத சாதனைகளாகும். ஒரு மூங்கில் காட்டில் எல்லா மூங்கில்களும் புல்லாங்குழல் ஆவதில்லை. எங்கேயாவது ஒன்று புல்லாங்குழல் ஆகும் பாக்கியம் பெறும். அதுபோன்றுதான் பல்கலைக்கழக வாழ்வில் பாக்கியம் பெற்ற வித்தியும் ஒரு புல்லாங்குழல் போன்று தமது காலத்தில் இருந்திருக்கின்றார்.

பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்களுள் செயலாண்மைத் திறம் மிக்கவர்களை விரல்விட்டெண்ணி விடலாம். நித்தியானந்தனின் செயலாண்மைத் திறன் பற்றி இரண்டு விதமான கருத்துக்கு இடமேயில்லை. இலங்கை அரசாங்கம் முத்திரை வெளியிட்டு அவர் பணிகளை கௌரவித்துள்ளமை அவருக்குக் கிடைத்த அங்கீகாரமாகும். பல்கலைக்கழக புகுமுகத் தேர்வுக்கு ஆங்கிலம், லத்தீன் மொழிகளைப் பாடங்களாகக் கற்றவர். ஆங்கில மொழி மூலமே கல்வி கற்றவர். ஆங்கிலத்தில் பெரிதாக எழுதாது தமிழ்மொழி மூலமே எழுதிக் குவித்தார்.

இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ் ஆசிரியர்களாக சுவாமி விபுலாநந்த அடிகளார், கலாநிதி கந்தசுவாமி கணபதிப்பிள்ளை, திரு. வி. செல்வநாயகம் ஆகியோர் கற்பித்த காலத்தில் உயர் சிந்தனை கொண்ட மாணவராக சு. வித்தியானந்தன் திகழ்ந்தார்.

கொழும்பு பல்கலைக்கழகக் கல்லூரி 1942 ஆம் ஆண்டு இலங்கைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக் கழகமாகத் தரமுயர்த்தப்பட்டதும் சுவாமி விபுலாநந்தரே முதலாவது தமிழ்ப் பேராசிரியராக அழைக்கப்படுகிறார். 1946 ஆம் ஆண்டு சுவாமி விபுலாநந்தர் மறைந்ததும் பேராசிரியர் கணபதிப்பிள்ளை தமிழ் பேராசிரியரானார். விபுலாநந்தருக்குக் கணபதிப்பிள்ளையும் வித்தியானந்தனும் மாணவராகின்றனர். கணபதிப்பிள்ளை 1936 ஆம் ஆண்டு தமிழ் விரிவுரையாளராக நியமனம் பெற்றவர். சு. வித்தியானந்தன் 1946 ஆம் ஆண்டு தமது இருபத்திரண்டு வயதில் எம். ஏ. பட்டம் பெற்று இலங்கைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளரானார்.

விபுலாநந்தரிடம் இரண்டு ஆண்டுகளாகவே அக்காலத்தில் அமையப்பெற்ற சிறப்புக்கலைத் தமிழும் இரண்டாண்டுகள் முதுகலைமாணித் தமிழும் கற்றுத் தேர்ந்த பின்னரே இலங்கைப் பல்கலைக்கழகத்தில் துணை விரிவுரையாளராக வித்தியானந்தன் நியமனம் பெற்றார். விபுலாநந்தரின் மாணவர் என்பதை அவர் பெருமையாகப் பல இடங்களில் கூறியுள்ளார். சுவாமி விபுலாநந்தரின் மறைவின் பின் கணபதிப்பிள்ளை தமிழ்த்துறைத் தலைவராக இருந்தபோது வித்தியானந்தன் தமிழ் துறையிலே செல்வாக்கு மிக்கவராக விளங்கினார்.

1948 - 1950 ஆம் ஆண்டு வரை இலண்டன் பல்கலைக்கழகத்துக்கு கீழைத்தேய கல்விச்சாலைக்குச் சென்று அல்பிரட் மாஸ்ரர் என்ற அறிஞரின் மேற்பார்வையில் தமது டாக்டர் ஆய்வைத் திறம்படச் செய்து முடித்து நாடு திரும்பி விரிவுரையாளர் என்ற தரத்துக்குப் பதவி உயர்வு பெற்றார். 26 ஆம் வயதில் "கலாநிதி சு. வித்தியானந்தன்" என்ற பெயரிலே பிரபலமானார். 1956 ஆம் ஆண்டு வித்தியானந்தன் மூத்த விரிவுரையாளராகவும், 1967 ஆம் ஆண்டு ஆராய்ச்சித் தலைவராக (Reader) வும், 1971 ஆம் ஆண்டிலே பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியராகவும் (வி. செல்வநாயகம் பேராசிரியராக ஐந்து வருடங்கள் இருந்து ஓய்வு பெற்றதும்) 1977 ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாகத் தலைவராகவும் நியமிக்கப்பட்டார். 1978 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தரானார். இப்பதவி நிலையிலிருந்து பத்தாண்டுகள் தொடர்ச்சியாகப் பணியாற்றினார்.

1981 ஆம் ஆண்டு துணைவேந்தரென முழுநிலை நியமனம் பெற்ற முதல் இலங்கைத் தமிழர் பேராசிரியர் சு. வித்தியானந்தனே. (தமிழர் சிலர் சிறுகாலப் பிரிவுகளுக்கு மட்டுமே தற்காலிகத் துணைவேந்தர்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்துள்ளனர்.) பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகளின் பணிப்பாளர் குழுவின் தலைவராகவும் அவர் பணியாற்றினார். அது நமது நாட்டுப் பல்கலைக்கழகக் கல்விப் படிநிலையில் ஒருவர் வகிக்கக்கூடிய அதியுயர் பதவியாகும்.

1953 ஆம் ஆண்டின் பின்னர் (இற்றைக்கு 70 ஆண்டுகளுக்கு முன்பு) பல்கலைக்கழகம் புகுந்தவர்களுள் ஆ. சதாசிவம், ச. தனஞ்செயராசசிங்கம், க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, எம். எம். உவைஸ், சி. தில்லைநாதன், பொ. பூலோகசிங்கம், ஆ. வேலுப்பிள்ளை மற்றும் வித்தியானந்தன் மீது மிக்க அன்பு வைத்திருந்த அ. சண்முகதாஸ், சி. மௌனகுரு ஆகியோர் பிற்காலங்களில் பேராசிரியர்களாக வந்தவர்கள் என்பது இங்கு சிலாகித்துக் கூறத்தக்கவர்களாவர். திருமதி லோகேஸ்வரி கணேசலிங்கம், நா. சுப்பிரமணியம், திருமதி சின்னையா மற்றும் பிற்காலத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையை அலங்கரித்த அமரர் க. அருணாசலம், துரை மனோகரன் போன்ற பேராசிரியர்களும் முக்கியமானவர்களாக இருந்துள்ளனர்.

பேராசிரியர் எஸ். தில்லைநாதன் அவர்கள் சு. வித்தியானந்தன் பற்றிக் குறிப்பிடும் போது பின்வருமாறு கூறுகிறார். "...... மாணவர்களுடைய அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமான நல்லாசிரியனாகவும், சிறந்த கல்விமானாகவும், திறன்வாய்ந்த ஆராய்ச்சியாளனாகவும் அவை யாவற்றுக்கும் மேலாக அனைவரையும் பணிவோடு அரவணைத்த மகோன்னத மனிதாபிமானியாகவும் திகழ்ந்த வித்தி அவரை அறிந்தவர்களால் என்றும் போற்றப்படுவார்." பேராசிரியரின் இக்கூற்று மிக்க பொருத்தமுடையதாக இன்றும் உள்ளது என்பதற்கு வெண்ணிலாவில் இடம் பெறும் பதிவுகள் சாட்சி பகர்கின்றதெனலாம்.

பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவரது 29 ஆவது வயதில் 1953ல் "இலக்கியத் தென்றலும்" 30 ஆவது வயதில் 1954ல் "தமிழர் சால்பு" நூலும் பின்வந்த ஆய்வாளர்களான எம். எம். உவைஸ், கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோர் வியாக்கியான முறையில் ஆய்வு செய்து பிரபலமானவர்களாக வருவதற்கு அடித்தளமாக அமைந்தது. தமிழர் சால்பு நூல் மூலமாகவே தமிழ்நாட்டுத் தமிழ் துறை அறிஞர்களும் விழித்துக் கொண்டனர் எனலாம்.

ஏன் முஸ்லிம்கள் பேராசிரியர் சு. வித்தியானந்தனுக்கு இந்தளவு தூரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியாதை கொடுக்கின்றனர் என்றால் அது தனியாக ஆய்வு செய்யப்பட வேண்டிய ஆழமான விடயமாகும். வித்தியானந்தன் அளவுக்கு முஸ்லிம்களை அரவணைத்துக் கொண்ட தமிழ்ப் பேராசிரியர் இதுவரை உயர் கல்வித்துறையில் அடையாளப்படுத்தப்படவில்லை என்று கூறுவது பிழையான கூற்றாக இராது என்றே வெண்ணிலா நினைக்கின்றது.

ஆங்கில மொழிப் புலமையும் நகரப்புற லண்டன் வாழ்க்கை முறையும் கலாநிதிப் பட்டப்படிப்பின் பின்பு அவரைத் தடம் புரளச் செய்யவில்லை. நாட்டுப்புறத்தை நாடினார், ஓடினார், தேடினார். கேட்பாரற்றுக் கிடந்த கலை வடிவங்களுக்கு அரியாசனம் அமைத்துக் கொடுக்க தன்னையே அர்ப்பணித்தார். இந்த வகையில் நாட்டார் கலைகளுக்குப் புத்துயிரளித்துப் பேணும் அரங்காக பேராதனைப் பல்கலைக்கழகத்தைப் பயன்படுத்திய வித்தகரே பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன். இவர் நாட்டார் கலைகளுக்குப் பல்கலைக்கழக அந்தஸ்துக் கிடைக்கச் செய்தார். தன்னந்தனியாக நின்று பொறுப்புடன் செயல்படுத்தியவர். தனது சிந்தனையை வற்றாத நதியாக ஓடவைத்துத் தமிழர் பண்பாட்டை வளம் கொழிக்கச் செய்தார். இதற்குப் பசளையாக இருந்து செயல்பட்டு தடம்பதித்த மற்றுமொரு மங்காத் தாரகையே பேராசிரியர் சி. மௌனகுரு என்ற மனிதாபிமானி.

சிறுவயதிலிருந்தே கூத்துடன் தொடர்பு பட்டிருந்த சி. மௌனகுரு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கூத்துத் தயாரிக்கும் விடயத்தில் கலாநிதி வித்திக்குப் பக்கபலமாக இருந்துள்ளார்.

மட்டக்களப்பிலே இருந்து பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு மாணவனாகத் தெரிவான சி. மௌனகுரு மட்டக்களப்பின் முதல் பேராசிரியராவார். இவர் பேராதனைக்குத் தெரிவாகி சிறப்புக் கலைத் தமிழ் பயிலத்தொடங்கிய நான்கு ஆண்டுகளும் முழுநேரப் பல்கலைக்கழக மாணவனாக இருந்தவர். இதுவே கலாநிதி சு. வித்தியானந்தனின் நாட்டுக் கூத்துத் தயாரிப்பு முயற்சிகளுக்கு வாய்ப்பாகவும் உந்து சக்தியாகவும் அமைந்தது.

மௌனகுருவைக் கதாநாயகனாகக் கொண்டு "கர்ணன் போர்" என்ற வடமோடிக் கூத்தையும் "நொண்டி நாடகம்" என்ற தென்மோடிக் கூத்தையும் "இராவணேசன்" மற்றும் "வாலிவதை" என்ற வடமோடிக் கூத்துக்களையும் வித்தியானந்தன் தயாரித்தளித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து ஆலயங்களின் திறந்த வெளி அரங்குகளில் விடிய விடிய ஆடப்பட்ட கூத்துக்களை ஒன்றரை மணித்தியாலத்துக்குள் அமைத்ததோடு நடிப்புப் பண்புகள், இராக தாளங்களை ஒழுங்குபடுத்தியதோடு ஒலி, ஒளி, மேடையமைப்புகளை கூத்திற் பாவித்தமையும் கூத்துக்களுக்கு நித்தி கொண்டுவந்த வித்தியாசமான திருத்தங்களாகும். பெண்களையும் ஆடவைத்தார்.

மட்டக்களப்புக் கூத்துக்களை அறிமுகப்படுத்தியது போன்று யாழ்ப்பாணத்து அண்ணாவி மரபு நாடகங்கள், முல்லைத்தீவு கோவலன் கூத்து, சிலாபக் கூத்து, மன்னார் கூத்து, மலையகக் கூத்து என்பனவெல்லாம் பேராதனை, கண்டி, கட்டுகஸ்தோட்டை, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கொழும்பு என்றவாறு நாடுகள் தழுவிய ரீதியில் மேடையேற்றப்பட்டன.

பேராசிரியர் சு. வித்தியானந்தனின் முயற்சி தேசிய முக்கியத்துவம் மிக்கதெனலாம். கிராமியத் தமிழ் விவசாய சமூகத்தின் கூத்துக்கள் அவ்வச் சமூகத்தில் மட்டுமே பரிச்சயமானது. இதனைப் பேராசிரியர் தேசிய மட்டத்திற்கு எடுத்துச் சென்றார். சிங்களவர், தமிழர், இஸ்லாமியர் அறிந்து கொள்ளக்கூடிய வகையில் கூத்துக்களைச் செம்மைப் படுத்தி புரிந்துணர்வை வளர்த்தார். கூத்துக்களின் புத்தாக்கத்தில் முதலாவது காலகட்டத்திற்குப் பேராசிரியர் சு. வித்தியானந்தன் என்றால் சர்வதேச மட்டத்திற்கு எடுத்துச் சென்ற இரண்டாவது காலகட்டத்திற்குரியவர் பேராசிரியர் சி. மௌனகுரு ஆவார்.

வித்தியானந்தனுக்குப் பின்னர் தொடர்ச்சியாக இப்பணியினைச் செய்து கொண்டிருப்பவர் பேராசிரியர் சி. மௌனகுருவே. கிழக்குப் பல்கலைக்கழகத்திலே நிரந்தர அரங்கை நுண்கலைகளுக்கு அமைத்துக் கொடுத்தவர் என்பதை அறியாதவரிலர். பேராசிரியர் வித்தி தூவிய விதைகளில் பெரு விருட்சமாக வளர்ந்து நின்று பாரம்பரியத்தின் பன்முகப் பாங்கை பாரெல்லாம் பறைசாற்றிடும் பணியை பேராசிரியர் சி. மௌனகுரு செம்மையுறச் செய்துள்ளார். மாணவர் மத்தியில் மட்டுமல்ல மக்கள் மத்தியிலும் ஓர் ஒளிவிளக்காகப் பிரகாசிப்பவரே சி. மௌனகுரு. சுவாமி விபுலாநந்தர் அழகியற் கற்கை நிலையத்தில் நாடகமும் அரங்கியலையும் புகுத்தி அதனுள் ஓர் அலகாக வடமோடி, தென்மோடிக் கூத்துக்கள் என்பவற்றைப் புதிய கற்கை நெறியாக்கியுள்ளார். கூத்தினைக் கல்வியியலாக்குவதில் பேராசிரியர் மௌனகுருவின் உழைப்பிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்புத் தமிழ்ப் பேசும் சமூகம் கடமைப்பாடுடையதாக உள்ளது. மட்டக்களப்புப் பிராந்தியத்தில் நாடகமும் அரங்கியலையும் ஒரு பாடமாக ஆக்கியதே சி. மௌனகுரு என்பதில் சந்தேகமே இல்லை. கிழக்குப் பல்கலைக்கழக விசேட கற்கை நெறி மூலம் பாடசாலை மட்டத்தில் நாடகமும் அரங்கியலுக்கும் மாணவர்களைத் தயார்படுத்தக் கூடியதாக இருப்பது இப் பிராந்தியத்திற்குக் கிடைத்த அளப்பரிய வெற்றியாகும்.

பேராசிரியர் மௌனகுரு உழைப்பினால் கிராம மக்களுடன் இரண்டறக் கலந்த கூத்துப் பாரம்பரியம் பாடசாலை மட்டம், பல்கலைக்கழக மட்டத்தினுள் பிரவேசித்து பல ஆய்வுகள், சிரமங்கள், பலத்த உழைப்பின் பின்னர் கடல் கடந்து எல்லைகள் தாண்டி மரபுக்கலைகளில் ஒன்றாக ஒஸ்லோவில் அரங்கேறியதை அறிவோம்.

தமிழ் சமூகத்தின் பண்பாட்டையும், அவர்களது கலைகளையும், பிறமொழி பேசும் சகோதரர்களும் புரிந்துகொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது, பேராதனைப் பல்கலைக்கழக திறந்த வெளி அரங்கில் “கர்ணன் போர்“, “இராவணேசன்“ நாடகங்கள் தேசிய உணர்வுக்கு வித்திட்டமைக்குப் பேராசிரியர் சு. வித்தியானந்தன் எடுத்த முடிவே காரணம். நான்கு நாட்டுக் கூத்துக்களையும் பன்னிரண்டு நாடகங்களையும் நாட்டின் பல பகுதிகளில் மேடையேற்றினார். 1974 இல் உலகத் தமிழ் மகாநாட்டை நடத்தினார். தனிநாயகம் அடிகளார் வரிசையில் இடம் பிடித்தார் சு. வித்தியானந்தன்.

வேறுபட்ட இனக் குழுக்கள் மத்தியில் புரிந்துணர்வுக்கு வித்திட்டவர் என்பதால் பேராதனைப் பல்கலைக்கழகக் கலைப் பீடத்தில் அமைந்துள்ள கன்னங்கரா மண்டபத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள அரங்கிற்கு “பேராசிரியர் சு. வித்தியானந்தன்” அரங்கு எனப் பெயர் சூட்டுவதற்கு தமிழ் பேசும் சமூகம் காலம் கடத்தாது அழுத்தம் கொடுக்கவேண்டுமென அவரது நூற்றாண்டு அகவை தினத்தில் “வெண்ணிலா” சஞ்சிகை வினயமாக வேண்டிநிற்கின்றது.

- ஆசிரியர்.

**அடுத்த இதழ்:**
**இதழ் 12: ஜனவரி 2024 முதலாவது வாரம் வெளிவரும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன்.

**- முனைவர் திருநாவுக்கரசு கமலநாதன் -**

**ஸ்தாபகப் பீடாதிபதி**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**

- பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன் இலங்கைப் பல்கலைக் கழகம், பேராதனையின் தமிழ்ப் பேராசிரியர்.
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர்.
- சுவாமி விபுலானந்தர், பேராசிரியர் கணபதிப்பிள்ளை ஆகியோரின் மாணவர்.
- நாட்டுக் கூத்துக்களின் மீளெழுச்சிக்கும், நாட்டார் கலைகளின் இருப்புக்கும் வித்திட்ட தமிழ்மொழிப் பற்றாளர்.
- 2024 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 8 ஆம் திகதி அவரது 100 ஆவது அகவைத் திருநாளாகும்.
- 2024 ஆம் ஆண்டு அவர் வளர்த்த, அவர் நேசித்த யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் "பொன்விழா" ஆண்டாகும்.
- நூற்றாண்டும், பொன்விழா ஆண்டும் இணைவது இறை செயலாகும்.
- யாழ். பல்கலைக்கழகம் தனது பொன்விழா ஆண்டில் தனது முதலாவது துணை வேந்தருக்கு உரிய கௌரவம் தரும் என்று பூரணமாக நம்புகின்றோம். அதனையும் எதிர்பார்த்து இக்கட்டுரையைச் சமர்ப்பிக்கின்றேன்.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"

தமிழ் கூறு நல்லுலகம் நன்கறிந்த ஈழத்துப் பேரறிஞர் பேராசிரியர் சு. வித்தியானந்தனின் தாரக மந்திரமது. அவர் கலந்துகொள்ளும் எல்லா நிகழ்வுகளிலும் அவ் வாசகம் அவரிடமிருந்து ஒலிக்கத் தவறுவதில்லை. தாயுமானவரின் அக்கருத்தை முழுமையாக உள்வாங்கிய பேராசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள், அதனை வெறும் பேச்சளவில் மட்டும் கொள்ளாது, தன் வாழ்நாளில் தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும் உயர்ச்சிக்காகவும் மட்டற்ற பணிகளை ஆற்றி மகிழ்ந்தார். தமிழ்ப் பாரம்பரியக் கலைகளின் மீளெழுகைக்கும் வளர்ச்சிக்கும் அவர் ஆற்றிய பணிகள் எழுத்தில் கூறமுடியாதவை.

தமிழ் மக்களின் இருப்புக்கும் அவர்களின் எதிர்கால வாழ்வியல் மலர்ச்சிக்கும் அவர் தம் பாரம்பரியக் கலை வடிவங்கள் உறுதி செய்ய வல்லன என்பதை உணர்ந்த பேராசிரியர் அக் கலை வடிவங்களின் மீளெழுச்சிக்காகப் பல அரிய பணிகளை ஆற்றியுள்ளார். அவற்றைப் பேணிப்பாதுகாத்துக் கொள்வதற்காக உள்ளுணர்வுடன் கூடிய அக்கறையுடன் செயற்பட்டு வெற்றி கண்ட பெருமகனாவார்.

தமிழ்ப் பாரம்பரியக் கலைகளில் ஒன்றான நாட்டுக்கூத்துக் கலைக்கு அவர் ஆற்றிய பணிகளை தமிழ் கூறு நல்லுலகு நன்கறியும். இரவிரவாக விடிய விடிய ஆடப்பட்டு வந்த நாட்டுக் கூத்தினைக் காலத்தின் தேவை கருதி சுருக்கி மக்கள் விரும்பும் பாணியில் அதே நேரத்தில் அதன் பாரம்பரியத்துவம் சிறிதும் குறையாமல் புதிய வடிவத்தில் மக்கள் நாட்டமுள்ளவையாகத் தயாரித்தளித்து, கூத்து வடிவத்திற்குப் புத்துயிரளித்தார்.

பல்கலைக்கழக மட்டத்திலிருந்து, பல்கலைக்கழக மாணவர்களால் அக் கூத்து வடிவம் மக்கள் மத்தியில் அறிமுகமானபோது அது பெரும் வரவேற்பைப் பெற்றுக்கொண்டது.

நொண்டி நாடகம், கர்ணன்போர், வாலிவதை, இராவணேசன் போன்ற கூத்துக்கள் பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களால் தயாரிக்கப்பெற்று கண்டி பேராதனை இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் தொடர்ந்து யாழ்ப்பாணம், கொழும்பு, மட்டக்களப்பு, மன்னார், திருகோணமலை ஆகிய இடங்களிலும் மேடையேற்றப்பட்டு பெரும் வெற்றியைக்கண்டன.

கவினுறு ஓசை நயமும் பொருட் செறிவும் நிறைந்த நாட்டார் பாடல்கள் காலத்தின் போக்கினால் கவனிப்பாரற்று மெல்ல மெல்ல மறந்தும் மறைந்தும் செல்லும் நிலையிலிருந்து இதனைக் கவனத்திற் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் வித்தியானந்தன் அவற்றைத் தேடித் தொகுத்துப் பதிப்பித்துப் பாதுகாத்துக் கொண்டார். அவரிடம் இயல்பாகவே பொதிந்திருந்த தமிழ் மொழிப் பற்றும், சமூகப் பற்றும் காரணமாக இவையெல்லாம் அவரால் ஆற்றி முடிக்கப்பட்டிருந்தன.

பேராசிரியர் வித்தியானந்தன் அவர்கள் நீண்ட மாணவர் பரம்பரையினைக் கொண்டிருந்தார். அவர்கள் பேராசிரியரின் வழிகாட்டலில் நன்கு கற்றுத் தேர்ந்து உயர் பதவிகளை வகித்திருந்தனர். பேராசிரியர் சிவத்தம்பி, பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் தில்லைநாதன், பேராசிரியர் சண்முகதாஸ், பேராசிரியர் மௌனகுரு, பேராசிரியர் பாலசுந்தரம், பேராசிரியர் சந்திரசேகரம், பேராசிரியர் வேலுப்பிள்ளை, பேராசிரியர் சிவலிங்கராசா, பேராசிரியர் சுப்பிரமணியம், கலாநிதி அமீர்அலி, பேராயர் கலாநிதி ஜெபநேசன் என்று அவர் மாணவர் பரம்பரை நீண்டு செல்லும்.

அவர்களெல்லாம் பேராசிரியர் மீது கொண்ட பற்றும் அன்பும் மேன்மையானது. பேராசிரியர் சுவட்டில் தமிழ் மொழிக்கும், தமிழ் கலைகளுக்கும் பெரும் தொண்டாற்றி மகிழ்ந்தார்கள். ஆற்றியும் வருகிறார்கள். "தாய்மொழிப் பற்று, பெற்ற தாயின் மேல் கொண்ட பற்றுப்போன்று புனிதமானது" என்பது பேராசிரியர் வித்தியானந்தனின் உயர்வு தரும் கருத்தாகும். அந்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே அவரது ஒவ்வொரு தொழிற்பாடும் அமைந்து சிறப்புப் பெற்றன. அதன் வழி பேராசிரியருக்குத் தாய்மொழிப் பற்றுடன் தாய் மண் பற்றும் சமூகப் பற்றும் இணைந்து கொண்டன.

அரசியலில் தீவிர பங்கு கொண்டு தான் சமூகப் பற்றையும் தாய் மண் பற்றையும் வெளிக்கொணர வேண்டும் என்ற எண்ணம் அவருக்கிருக்க வில்லை. அவர் தன் வழியில் அவற்றின் மேம்பாட்டிற்காகவும் தமிழ்ப் பேசும் மக்களின் எதிர்கால இருப்பு நோக்கிலும் தன் பணியாற்றினார்.

தமிழ்ப்பேசும் இஸ்லாமியர், கிறிஸ்தவர்கள் அனைவரையும் இணைத்துக் கொண்டார். **'பிறையன்பன்'** எனும் பெயரில் இஸ்லாமியர் தமிழ்த் தொண்டை விதந்து ஆக்கங்கள் தந்தார். கிறிஸ்தவர்கள் ஆற்றிய தமிழ்த் தொண்டையும் சிறப்பித்துக் கட்டுரைகள் தந்தார். அவருடைய வாழ்வியலுடனும் பல இஸ்லாமியரும், கிறிஸ்தவரும் நெருக்கமாக இருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் பலர் உதாரணமாக அவுஸ்திரேலியாவில் வாழும் கலாநிதி ஏ.ஸி.எல். அமீர் அலி, யாழ்ப்பாணத்தில் வாழும் பேராயர் கலாநிதி ஜெபநேசன் ஆகியோருடன் நான் கலந்துரையாடக் கிடைக்கும் சந்தர்ப்பங்களிலெல்லாம் அவர்கள் பேராசிரியர் வித்தியானந்தன் பற்றியும் அவரது சிறப்புப் பற்றியும் அவர் தமது கல்விக்கும் சமூக வாழ்வுக்கும் உதவிய பாங்கினையும் சிறப்பித்துக் கூறும் போதெல்லாம் மகிழ்ச்சியாக இருக்கும். அவரிடத்து நானும் கல்விகற்றேன் என்ற பெருமையும் ஏற்படும்.

பேராசிரியர் இன, மத வேறுபாடற்று மக்களுடன் பழகினார். எல்லோரையும் சமமாக மதித்து ஊக்குவித்து உதவினார் - உயர்வித்தார், என்பதற்கு அப்பால் பிரதேச வேறுபாடுகளையும் மனங்கொள்ளாது செயற்பட்டு வழிகாட்டினார் என்பது மற்றுமொரு சிறப்பாகும். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார் ஆகிய தமிழர் பிரதேசங்களைக் கல்வியாலும், கலைகளாலும் இணைத்துத் தொழிற்பட்டார். இவற்றினை இணைக்கும் பாலமாக பேராசிரியர் வித்தியானந்தன் திகழ்ந்திருந்தார் என்பது மிகைப்படும் கூற்றன்று.

சிறப்பாக மட்டக்களப்பைச் சேர்ந்த பேராசிரியர் மௌனகுரு அவர்களுடன் பேசும் போதெல்லாம் அவர் தனக்கும் பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களுக்குமிடையே இருந்த உறவு நிலைபற்றி என்னுடன் விதந்து கலந்துரையாடத் தவறுவதில்லை. அங்கே அவர்களுடைய ஆசிரிய - மாணவ உறவு நிலை என்பதைத் தாண்டி தகப்பன் - பிள்ளை உறவுநிலை மிகைத்திருந்ததை என்னால் உணர்ந்து கொள்ளமுடிந்தது.

இவ்வாறு சகலரிடத்திலும் வேறுபாடற்ற அன்பு செலுத்தி, ஒன்றாகக் கற்பித்து, வழிகாட்டி உயர்வித்து அவர்கள் உயர்வில் தான் மகிழ்ந்து வாழ்ந்த பேராசிரியப் பெருந்தகைகள் அவர். அவர் வாழ்வு மேன்மையானது. அது எங்களுக்கு வழிகாட்டுவது.

அவர் மறைந்து பல ஆண்டுகள் கழிந்தாலும் இன்னும் எம்முடன் வாழ்ந்து கொண்டு இருக்கின்றார். அவர் நாமமும் வாழ்க.

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் வெளியீடுகளும் அதனைத் தொகுத்து வழங்குபவர்களும்.

ஒரு நூலினை எழுதி அதனை அச்சு வடிவமாக்கி, தான் மதிக்கும் அதேபோல் தன்னையும் ஒரு மனிதனாக மதிக்கும் அல்லது தன் உயர்வில் பெருமிதமடையும் தனது பாடசாலை ஆசிரியர்கள், நண்பர்கள், மதத் தலைவர்கள், பெற்றோர்கள், குடும்பத்தினர், உறவினர்கள், ஊர்ப் பெரியோர்கள், படித்தவர்கள், அரசியல்வாதிகள், வர்த்தகப் பெருந் தகைகள், இலக்கிய நண்பர்கள் போன்ற இன்னோரன்ன மக்களை அணுகி தனது நூல் வெளியீடு சம்மந்தமாகக் கூறி ஓர் அழைப்பினை விடுக்கும் வேளை, தங்களது பொன்னான நேரங்களை ஒதுக்கி "நான் நிச்சயம் வருவேன்" எனக் கூறும்போது ஒரு எழுத்தாளனோ அன்றி ஒரு கவிஞனோ அடையும் மகிழ்ச்சி இருக்கிறதே அது விபரிக்க முடியாத ஓர் உன்னத உணர்வு.

தனது படைப்பு விற்பனையாகிறதோ அல்லது தேங்கிக் கிடக்கிறதோ அல்லது விமர்சிக்கப்படுகிறதோ அல்லது நிராகரிக்கப்படுகிறதோ என்பதுபற்றி ஓர் எழுத்தாளனோ அன்றி ஒரு கவிஞனோ ஒருபோதும் கவலைப்படுவது கிடையாது. "காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்பது ஒரு படைப்பாளியின் விடயத்தில் மிகப் பொருத்தமானது.

ஆனால் புத்தக வெளியீடு நடைபெறும் தினத்தில் அதனைத் தொகுத்து வழங்கும் ஒரு சில தொகுப்பாளர்கள் அந்நிகழ்வையே கேள்விக்குறியாக்கி அன்றைய கதாநாயகனின் கனவையே தவிடுபொடியாக்கிவிடுகின்றனர். இத் தொகுப்பாளர்களில் பலர் தாங்களாகவே முன்வந்து இடத்தைப் பிடித்துக்கொள்பவர்கள் எனக் காணக்கிடக்கிறது. இவ்விடயம் அண்மைக் காலமாக கவிதைப் பிரதிகள் வெளியீடு செய்யப்படும் நிகழ்வுகளிலேயே அதிகம் காணக்கூடியதாக உள்ளது.

நிகழ்வில் கலந்துகொள்பவர்கள் பற்றிய தகவல்களை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளாமலும் அவர்களது நிலையை அறிந்து கொள்ளாமலும் தான்தோன்றித்தனமாக ஒலிவாங்கியைக் கையில் எடுத்துக்கொள்கிறார்கள். அதன் விளைவு "ஏன் இந் நிகழ்வில் கலந்துகொண்டோம்" என்ற உணர்வை வருகைதருவோரிடம் ஏற்படுத்தி விடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வைத் தொகுத்து வழங்கும் நபர் ஓர் அரசியல்வாதியை பல நிமிடங்கள் வர்ணித்துவிட்டு அவரை மேடைக்கு அழைக்கும்போது அவரது பெயரை மறந்து ஒரு சில நிமிடங்கள் வாயடைத்துப்போய் நின்றுவிடுகிறார். வந்திருப்பவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துவிட்டு யாராவது ஒருவர் அவரது பெயரைச் சத்தமிட்டுக் கூறுவார். தடுமாற்றத்தில் இருக்கும் தொகுப்பாளர் சில வேளைகளில் பெயரைப் பிழையாகவும் கூறிவிடுவதுண்டு. இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது அவரும் எழுந்துவந்து புன்சிரிப்புடன் நூலைப் பெற்றுக்கொண்டு சென்றுவிடுவார். (அரசியல்வாதிகள் எதையும் பொருட்படுத்தமாட்டார்கள் என்பது வேறு விடயம்.)

அடுத்து மூத்த பிரஜைகள், மதத்தலைவர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள், வைத்தியர்கள், எந்திரிகள், சட்டத்தரணிகள், கல்விமான்கள் மற்றும் பொதுமக்களை நூலைப் பெற்றுக்கொள்ள பெயர் சொல்லி மேடைக்கு அழைக்கும்போது அவர்களது பதவிகளைக் கட்டாயம் குறிப்பிட்டு மரியாதையாக அழைக்கவேண்டும். ஏனென்றால் அவர்களது மனைவியோ-கணவனோ, உறவினர்களோ அல்லது நண்பர்களோ அல்லது ஒன்றாக வேலைசெய்பவர்களோ அவருடன் வந்திருக்கலாம். அவர்கள் என்ன நினைப்பார்கள்?

உதாரணமாக ஒரு பல்கலைக்கழக பேராசிரியரை மேடைக்கு அழைக்கும்போது “நூற்றுக் கணக்கான மாணவச் செல்வங்களின் கல்விக்கு ஒளியூட்டிய எமது பிரதேசத்தைச் சேர்ந்த கெம்பஸ் ஆசிரியர் ..........(அவரது பெயர்) அவர்களை அன்புடன் அழைக்கிறோம்” என ஒலிவாங்கியில் அழைத்தால் எப்படியிருக்கும்?

அடுத்து, அழைப்பிதழை எடுத்துக்கொள்வோம். நூலாசிரியர், அழைப்பிதழை அச்சிடும்போது அவருக்குப் பிடித்ததோர் ஒழுங்கு முறையில் அச்சிட்டிருப்பார். அது அவரது சொந்த விருப்பு. அதில் தலையிடவேண்டியதில்லை. அழைப்பிதழில் அச்சிட்டுள்ள வரிசையில் பிரமுகர்களை அழைக்கவேண்டுமென கட்டாயப்படுத்தியும் கூறியிருப்பார். அது அவரது கடமை. ஆனால், இந்தத் தொகுப்பாளர்கள் எதையுமே காதுக்கெடுத்துக் கொள்ளமாட்டார்கள்.

மற்றையது - முதன்மைப் பிரதிகள் பெற்றுக்கொள்ள வந்திருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிதிகளை மேடைக்கு வருமாறு அழைப்பார்கள். அத்துடன் பிரதிகளை வழங்கிவைப்பதற்கு முதன்மை அதிதி அவர்களையும் சிறப்பு அதிதி அல்லது அதிதிகளையும் அழைப்பார்கள். ஆனால் தலைமை தாங்குபவரை மறந்துவிடுவார்கள். இதைப் புரிந்துகொண்ட முதன்மை அதிதி "நீங்களும் வாங்க" என தலைமை தாங்குபவரை அன்புடன் அழைத்து தன் பக்கத்தில் நிறுத்திக்கொள்வார்.

மேலும் - நூல் பிரதிகள் வழங்க அழைப்பிதழில் அச்சிட்டப்பட்ட வரிசையில் பெயர்கள் கூறி அழைக்கப்படுவார்கள். முதலாவது இரண்டாவது என அழைக்கப்படும்போது மூன்றாவது நபர் அடுத்து தன்னை அழைக்கப்போகிறார்கள் என நினைத்து மேடைக்குச் செல்ல ஆயத்தமாவார்.

இதற்கிடையில், ஏற்பாட்டாளர்களில் ஒருவர் திடுதிடுவென மேடையில் ஏறி தொகுப்பாளரின் காதில் ஏதோ குசுகுசுப்பார். மேடையில் யார் இருக்கிறார்கள் என்பது பற்றியெல்லாம் அவருக்குக் கவலையில்லை. நிமிர்ந்து முன்னால் இருப்பவர்களைப் பார்த்து ஒருமுறை பல்லையும் காட்டிக்கொள்வார்.

தொகுப்பாளர் அடுத்து யாரை அழைக்கவேண்டுமென்பதை மறந்து மேற்சொன்ன மூன்றாவது நபரை அழைக்காமலே விட்டுவிடுவார். ஏமாற்றமடைந்த அந்த நபர் பக்கத்திலிருப்பவரைத் திரும்பிப் பார்ப்பார். சொல்லி வைத்ததுபோல் அவரும் "உங்களைத்தானே கூப்பிட்டிருக்கவேண்டும்?" எனக் கடுப்பேற்றிவிடுவார்.

இவ்வாறான அனைத்து தவறுகளும் கட்டாயம் தவிர்க்கப்பட்டு, நிகழவிருக்கும் நூல் வெளியீட்டு விழாக்கள் அனைத்தும் முறையாகத் திட்டமிடப்பட்டு பொருத்தமான தொகுப்பாளர்கள் தெரிவுசெய்யப்பட்டு அழகிய முறையில் கௌரவமாக நடாத்தப்படவேண்டும். ஏனெனில் எமது ஓர் அழைப்பை ஏற்று ஆயிரம் வேலைப்பளுக்களுக்கு மத்தியிலும் தங்களது பொன்னான நேரத்தை ஒதுக்கி எம்மைக் கௌரவப்படுத்தவேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடு வருபவர்கள். அப்படிப்பட்டவர்களை நாம் உரிய முறையில் கௌரவிக்கத் தவறும் பட்சத்தில் நாம் நன்றிகெட்டவர்களாகிவிடுவோம்.

**- காவியன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகநூல் பதிவு

## கவிதை ஒரு கற்பனைச் செயல்!

எழுத்தாளர்
**- ஜிஃப்ரி ஹாஸன் -**

தமிழ் இலக்கியப் பரப்பில் இன்று எழுதிக் கொண்டிருக்கும் இலங்கையின் இன்றைய தலை முறைக் கவிஞர்கள் பலரும் கவிதையை ஒரு கற்பனைச் செயலாக மட்டுமே காண்கின்றனர். அதனால் ஆழமான சிந்தனை உதிர்ப்பு, வாழ்வு, இயற்கை மற்றும் அன்றாடம் பற்றிய ஆழ்ந்த கருத்துகளை கவிதைகளில் இவர்கள் வெளிப்படுத்துவதில்லை. நுண் அழகியல் சித்தரிப்புகளைக் கூட மிக அரிதாகத்தான் சந்திக்க கிடைக்கிறது. இதனால் கவிதைகள் நிலைக்கும் தன்மையற்றதாக, நிலத்தில் சிந்தப்பட்ட திரவம் போன்று முடிந்துவிடுகின்றன. மறுபுறம், தமிழகத்தின் நிலைமை முற்றிலும் வேறானது. அங்கு கவிஞர்கள் கவிதைகளை கற்பனைச் செயல்பாடு என்ற புரிதலுக்கு அப்பால் அதனை ஒரு சிந்தனைச் செயல் பாடாகவும் காண்கின்றனர். அதனையே கவிதை பற்றிய முதன்மையான நோக்காகவும் முன்னிறுத்துகின்றனர். கவிதை களை வாசிக்கும் தருணம் நமக்கும் அதிலிருந்து ஏதோவொன்று கிடைத்துவிட்டது போல் நாம் உணர்வதும் அதனால்தான்.

பிரபஞ்சம், இயற்கை, வாழ்வு, அன்றாடம், அழகியல் என விரியும் கவியுலகில் வாசிப்பின் பின்னர் நம்மில் ஏதாவது மீந்திருக்க வேண்டாமா? சிந்தனை ஆற்றல் வலுவாக வெளிப்படாத வெறுங்கவிதைக் கிறுக்கல்களால் ஓர் ஆழமான வாசகர் பரப்புக்குள் நம்மால் நுழைய முடியாமல் போகும். ஓர் ஆழமான படைப்பு இலகுவில் சாத்தியமாகக் கூடியதல்ல. நாம் உழைத்தாக வேண்டும். நம்மளவில் (எழுதுபவர்) நாம் எழுதுவது நல்ல படைப்பாகத் தோணலாம். ஆனால் அதற்கான ஏற்பும், மறுப்பும் நமக்கு வெளியே தீவிரமான வாசகர் / விமர்சனப் பரப்பிலேதான் நிகழ்கிறது.

ஆக, ஈழத்தின் நம் காலத்தின் கவிஞர்களே,

தமிழின் இன்றைய கவிஞர்களில் யாரை எல்லாம் வாசித்திருக்கிறீர்கள்? உலகின் எந்தக் கவிஞனை வாசித் திருக்கிறீர்கள்? வாசிக்கவும், எழுதவுமான பெருவெளி முக நூலுக்கு வெளியேதான் இருக்கிறது என்பதை புரிந்து கொள்வீர்கள் என நம்புகிறேன். உங்களிடம் மகத்தான கவிதைகளை எழுதும் ஆற்றல் உண்டு என்பதையும் உங்கள் கவிதைகள் வெகுவாக நிரூபணம் செய்கின்றன.

**- ஜிஃப்ரி ஹாஸன்.**
02-07-2023.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அவர் ஒரு மகாகவி, கல்விமான், கலாநிதி, விடுதலைப்போராட்ட வீரரும் கூட. அவர்தான்...**

# அல்லாமா முஹம்மது இக்பால்!

**- ஐ. ஏ. ஸத்தார் -**

எமது இளம் சந்ததியினர்-மூதாதையர் பற்றிய வரலாறுகளைப் படிப்பதில் ஆர்வம் குன்றியவர்களாகக் காணப்படுவது, எதிர் காலத்தில் எமது வரலாற்றை நாம் சூன்யமாக்கிக் கொள்ளக்கூடிய ஒரு பயங்கர நிலையை உருவாக்கிவிடலாம்.

எமது வரலாற்றை மீட்டுப் பார்ப்பதற்கு, வரலாற்றில் வந்துபோன நாயகர்களை நாம் நினைவுபடுத்திப் பார்ப்பதும், அவர்கள் செய்து விட்டுச் சென்றுள்ள பணிகளை நினைவு கூர்வதும், அவற்றை எமது சந்ததியினருக்கு எத்திவைப்பதும் எமது தலையாய கடனாகும்.

எமது சமூகத்திற்காகப் பாடுபட்ட, பணிகள் புரிந்த, உலகில் முன்னுதாரணமாகத் திகழப்பட வேண்டிய பலரது வாழ்க்கை வரலாறுகள் அவ்வப்போது மீட்டிப்பார்க்கப்பட வேண்டியவை.



**கவிஞரும், மெய்யியல் அறிஞருமான சேர் அல்லாமா முகமது இக்பால்**

பிறப்பு: 1877 நவம்பர் 9
இறப்பு: 1938 ஏப்ரில் 21

அந்த வகையில் கலாநிதி மகாகவி சேர் அல்லாமா முஹம்மது இக்பால் அவர்களைப் பற்றி சுருக்கமானதொரு விளக்கத்தை இக்கட்டுரை தருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவின் பஞ்சாப் மாகாணத்தின் எல்லையில் அமைந்துள்ள சியால்கோட் என்னுமிடமே கலாநிதி மகாகவி சேர் அல்லாமா முஹம்மது இக்பால் அவர்களின் பிறப்பிடம். 1877 நவம்பர் 9ம் திகதி மார்க்கப் பற்றுமிக்க ஷேக் நூர் முஹம்மத் என்பவருக்கு இளைய மகனாகப் பிறந்தார். இக்பால் என்றால் புகழ் என்று பொருள்படும். அவர், தம் பெயருக்கேற்ப, பிற்காலத்தில் கவிதை, கல்வி, வரலாறு, தர்க்கசாஸ்திரம் போன்ற சகல துறைகளிலும் புகழ்பெற்று விளங்கினார்.

முதற்கல்வியாக முஸ்லிம் சமூகத்தினர் அனைவரும் கற்கும் அறபு மொழியையும், அல்குர்ஆனையும் தம் இளம் பிராயத்திலேயே அவரும் மத்றஸா சென்று முறையாகக் கற்றுக் கொண்டார். பின்னர் ஆரம்பப் பாடசாலையில் சேர்ந்து தனது உலகக் கல்வியைத் தொடங்கிய அவர், அடுத்து நடுநிலைப் பாடசாலைக்கு உள்வாங்கப்பட்டு, அங்கே தன் கல்வித் திறமையை வெளிப்படுத்தி, புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து உயர் கல்லூரியில் சேர்ந்தார்

**தந்தையின் அறிவுரை:**

முஹம்மது இக்பால் அவர்கள் கல்லூரியில் சேரும்போது, மார்க்கப் பற்றுமிக்க அவரது தந்தை, நீ உன் வாழ்வில் வெற்றியடைய நேர்ந்தால், உன் கல்வியை இஸ்லாத்துக்காகவே பயன்படுத்து என்ற அறிவுரையை ஆணித்தரமாகப் பகிர்ந்தார். தந்தையின் அறிவுரை முஹம்மது இக்பால் அவர்களின் மனதில் ஆழமாகப் பதிந்தது. அதுவே அவர்களைத் தன் வாழ்நாள் முழுவதும் தான் பெற்றுக் கொண்ட அறிவையும், கவிதைகளையும் இஸ்லாத்திற்காகவே பயன்படுத்த உந்து சக்தியாக அமைந்தது. இளம் வயதில் பெற்றோர் தம் பிள்ளைகளுக்குக் கொடுக்கின்ற நல் அறிவுரையானது எந்த அளவுக்கு எதிர்காலத்தில் அவர்களை ஒரு கட்டுக்கோப்பில் வைத்துக் கல்வி பெற்று, உயர் ஸ்தானத்திற்குக் கொண்டு செல்கின்றது என்பது கலாநிதி மகாகவி சேர் அல்லாமா முஹம்மது இக்பால் அவர்களின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து நம் பெற்றோரும் பிள்ளைகளும் உணர்ந்து கொள்ளலாம்.

**கவிதை இயற்றுவதில் திறமை:**

சிறுபிராயம் முதலே சுயமாகவே கவிதைகள் அவர் உள்ளத்திலே ஊற்றெடுக்கும். நள்ளிரவில் அவரது மனதில் ஊற்றெடுக்கும் கவிதைகளைக் குறித்துக் கொள்வதற்காக எப்பொழுதும் தாளும் எழுதுகோலும் தன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையணைக்கடியில் வைத்திருப்பார்.

கவிதை இயற்றுவது மாத்திரமன்றி, இயற்றிய கவிதைகளை இசையோடு பாடுவதிலும் அவர் திறமை மிக்கவராகக் காணப்பட்டார். அவர் தம் கவிதைகளை உலக மக்கள் அனைவருக்குமாகவும் பாடினார்.

1947ல் இந்தியா சுதந்திரமடைந்த போது, முதன் முதலாக இந்தியப் பாராளுமன்றத்திலே அல்லாமா முஹம்மது இக்பால் அவர்களின் தேசியக் கீதமே ஒலித்தது.



எழுத்தாளர் ஐ. ஏ. சத்தார்

**நல்ல நூல்களை வாசித்தல்:**

கல்லூரி வாழ்க்கையின்போது, அவர் வெறும் புத்தகப் பூச்சியாக மாத்திரம் இருக்கவில்லை. நல்ல நூல்கள் வாசிப்பதிலும், நல்ல நண்பர்களுடன் சகவாசம் கொள்வதிலும் அவர் தனது ஓய்வு நேரத்தைக் கழித்தார். ஓய்வு வேளைகளில் அதிகமாக அறிவு நூல்களை வாசிப்பதில் ஈடுபட்டு வந்த அவர், தான் வாசித்த நூல்கள் பற்றி தனது நண்பர்களுடன் வாதாடுவதிலும், கருத்துப் பரிமாறுவதிலும் ஈடுபாடு காட்டிவந்தார்.

**நல்லாசான் தொடர்பு:**

சியால்கோட்டில் ஆரம்பக் கல்வியைக் கற்ற முஹம்மது இக்பால் அவர்கள், உயர் படிப்புக்காக லாகூர் சென்றார். அங்கே பி. ஏ. பட்டதாரியாகி தங்கப் பதக்கம் பெற்றார். அங்கு வைத்தே முஹம்மத் இக்பால் அவர்களுக்கு, இஸ்லாம் பற்றி நன்கு அறிந்தவரும், இஸ்லாம் பரவிய விதத்தைப் பற்றி விரிவாக ஆராய்ந்து நூல் எழுதியவருமான அலிகார் சர்வகலாசாலைப் பேராசிரியர் சேர் தோமஸ் ஆர்னால்ட் என்ற அறிஞரின் நட்புக் கிட்டியது.

இவரின் அந்நியோன்னியத் தொடர்பே முஹம்மது இக்பால் அவர்களை தத்துவசாஸ்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயில்வதற்கு தூண்டியதெனலாம். அங்கு வைத்தே அவர் தனது 27ம் வயதில் எம். ஏ. பட்டத்தைப் பெற்று, அதிலும் தங்கப் பதக்கத்தைத் தட்டிக் கொண்டார். அதன் பின்னர், லாகூர் ஓரியண்டல் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். ஒரு மனிதனுக்கு நல்லாசானின் தொடர்பானது அவனை நல்வழிப் படுத்தி, சமூகத்தில் உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்லும் என்பதற்கு, முஹம்மது இக்பால் அவர்கள் பேராசிரியர் சேர் தோமஸ் ஆர்னால்ட் அவர்களுடன் கொண்ட தொடர்பு ஒரு காரணமாகின்றது.

**கலாநிதிப் பட்டமும் பாரிஸ்டர் பட்டமும்:**

மேலும் தனது அறிவை விருத்தி செய்துகொள்வதில் தணியாத ஆர்வம் கொண்ட முஹம்மது இக்பால் அவர்கள், இங்கிலாந்து சென்று கற்க விரும்பி, தனது ஆதங்கத்தை சகோதரர் அதா முஹம்மதிடம் வெளியிட்டார். தனது சகோதரனின் ஆவலைப் பூர்த்தி செய்ய இணக்கம் தெரிவித்து முஹம்மது இக்பால் அவர்கள் இங்கிலாந்து சென்று படிக்கும் வாய்ப்பை அவரே ஏற்படுத்திக் கொடுத்தார். 1905ல் இங்கிலாந்து கேம்பிரிஜ் கல்லூரியில் சேர்ந்து கற்று, பி. எச். டி பட்டம் பெற்றார். பின்னர் ஜெர்மன் நாடு சென்று "பாரசீகத்தில் தத்துவஞான வளர்ச்சி" என்ற ஆராய்ச்சி நூலைச் சமர்ப்பித்தார். அவரது ஆற்றலைப் பாராட்டி அங்கு அவருக்குக் கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டது. மீண்டும் லண்டன் வந்து சட்டக் கல்லூரியில் சேர்ந்து பாரிஸ்டர் பட்டம் பெற்றார்.

**சேர் பட்டம்:**

1922ம் ஆண்டு பிரித்தானிய அரசாங்கம் இவரது இலக்கியத் திறமைகளையும், பணியையும் உணர்ந்து இவருக்கு "சேர்" பட்டம் வழங்கியது.

தனது வீரமிக்க கவிதைகளால் விடுதலைப் போராட்டம் நடாத்திக் கொண்டிருந்த கலாநிதி மகாகவி அல்லாமா முஹம்மது இக்பால் அவர்களுக்கு இதுவொன்றும் பெரிதாகப் படவில்லை.

1926ம் ஆண்டு கலாநிதி மகாகவி சேர் அல்லாமா முஹம்மது இக்பால் அவர்கள் பஞ்சாப் சட்டசபை அங்கத்தவரானார். 1928-1929ம் ஆண்டுகளில் கலாநிதி மகாகவி சேர் அல்லாமா முஹம்மது இக்பால் அவர்கள் சென்னை, பெங்களூர், மைசூர், ஹைதராபாத் வந்து, இளைஞர்களுக்கு விழிப் புணர்ச்சி ஏற்படுத்தும் விதத்தில் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1930ம் ஆண்டு அவர் அகில இந்திய முஸ்லிம் லீக் தலைவரானார்.

அதன் பின்னர் அவர் பல மாநாடுகளில் ஆற்றிய உரைகளும் கூட இந்திய சுதந்திரத்திற்கு வித்திட்டதெனலாம்.

**சர்வதேசக் கவிஞர்:**

இருபதாம் நூற்றாண்டின் மத்திய காலப்பகுதி வரை இந்தியத் துணைக்கண்டம் உட்பட துருக்கி, அறபு நாடுகள் போன்றவற்றில் பல கவிஞர்கள் தோன்றினாலும் கூட, இலட்சியக் கவிஞர் என்ற ஸ்தானத்தில் வைத்துப் போற்றப்பட வேண்டியவர் கலாநிதி மகாகவி சேர் அல்லாமா முஹம்மது இக்பால் அவர்களே எனக்கூறலாம்.

அவரது கவிதைகளிலே தத்துவம் மிளிர்ந்தது. விடுதலை ஆசை வீறுநடை போட்டது. மதப்பற்றும், இஸ்லாமியத்துவமும் நிறைந்திருந்தது. இறைதூதர் நேசம் உயர்ந்திருந்தது. அதுவே பாரசீக, உருது மொழிகளில் உருவான அவரது கவிதைகள் பல்வேறு மொழிகளிலும் மொழிமாற்றம் செய்யப்பட்டு, உலகம் முழுவதும் வியாபிக்கக் காரணமாயிருந்தது. அதனால்தான் அவர் ஒரு சர்வதேசக் கவிஞராகப் போற்றப்படுகின்றார்.

**இறைநேசமும் மனித நேயமும்:**

மகாகவி முஹம்மது இக்பால் அவர்கள் தன் கவிதைகளில் வீரமிக்க வரலாறுகளை வெளிப்படுத்தினார். இறை தூதர் அவர்களின் வரலாற்றிலே இனிமை கண்ட அவர், பாங்கே தரா (பாலைவன மணி ஓசை) என்ற தனது கவிதைத் தொகுப்பின் மூலம் இறைநேசம், இறை தூதர் அன்பு, இஸ்லாத்திலிருந்து முஸ்லிம்கள் தூரச் சென்றதன் மூலம் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட வீழ்ச்சி போன்றவற்றை வெளிப்படுத்தினார். உருது மொழியிலான இந்நூல் மூன்று பாகங்களாக வெளிவந்தது.

நேசம் என்ற தனது கவிதையின் மூலம் நேசம் நோய் படர்ந்த மக்களுக்குக் காயகற்பம் என்று குறிப்பிடும் அவர், நேசம் ஒரு நோயென்றால், சூரியன் உலகை வலம் வருவது நேசம் எனும் நோய்க்குப் பரிகாரம் தேடித்தான் என்று தத்துவரீதியாகக் கவிதை படைத்தார். அவரது அந்தக் கவிதை இன்றைய இலங்கைக்கு முற்றும் பொருத்தமானது எனலாம்.

30 வருட துயர் படிந்த யுத்தத்திலிருந்து விடுபட்டுள்ள நம் மக்களுக்கு இன்று தேவைப்படுவ தெல்லாம் இந்த நேசம் என்ற ஒன்றுதான். இலங்கை வாழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவின மக்களும் நேசக்கரம் நீட்டி வாழ வேண்டிய தருணம் இதுதான் என்பதை இக்கவிதையை நாம் படிப்பதன் மூலம் உணரலாம்!

**ஹஜ்ஜின் தாத்பரியமும் சமூக ஒற்றுமையும்:**

ஹஜ் பற்றிய தனது கவிதை யொன்றில் மக்கா செல்வதும், இஹ்ராம் கட்டுவதும், ஸம்ஸம் நீர் கொண்டு வருவதும் ஹஜ் என முஸ்லிம்கள் நினைக்கின்றனர் என்று குறிப்பிடும் அல்லாமா இக்பால் அவர்கள், ஹஜ் என்பது அதற்கும் மேலான ஒன்றை உணர்த்துகின்றது என்பதை புனித பூமியில் காலடி வைத்துத் திரும்பியவர் இதயத்திலே, இறக்கும் வரை இறைநேசம் நிறைந்திருக்க வேண்டும் என்றவாறாக தனது கவிதை ஒன்றின் மூலம் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

உலகப் பொருளாதார வளங் களைத் தமதாக்கிக் கொள்ள விளையும் மேல்நாட்டவருக்கு உலகை வியாபாரச் சந்தையாக்கிக் கொள்ளாதீர்கள் என்ற பொருள் பட தனது கவிதையொன்றின் மூலம் எச்சரித்துள்ளார் கவிஞர் அல்லாமா முஹம்மது இக்பால் அவர்கள். மேல் நாட்டு அறிவு படைத்த ஆயிரக் கணக்கான நம் தலைவர்கள் சுயநலத்திற்காக, ஒன்றுபட்டிருக்க வேண்டிய முஸ்லிம் சமூகத்தைப் பிளவு படுத்தி, பல்வேறு கூறுக ளாக்கியுள்ளனர். இத்தகைய சுயநலவாதிகளிடமிருந்து, எங்கள் சமூகத்தை இறைவன்தான் காப்பாற்ற வேண்டும் என்ற பொருள்பட அன்று அவர் பாடிய கவிதை, இன்றைய இஸ்லாமிய உலகிற்கும் நன்கு பொருந்துவனவாக உள்ளது.

அல்லாமா இக்பால் அவர்களின் கவிதைகளிலே இறைதூதர் மீது அளவற்ற பற்றும் அவர்களிடம் மன்றாடும் தன்மையும் காணப் படுவதை பின்வரும் கவிதையின் பகுதியொன்று நமக்கு உணர்த்து கின்றது.

நபிபெருமானே!
இக்கால வாழ்வில் இன்பம் எங்கே?
நாம் தேடும் உண்மை வாழ்வெங்கே?
ஆயிரக்கணக்கான பூந்தோட்டங்களில்
பல்லாயிரக் கணக்கான
மலர்கள் பிறக்கின்றன.

ஆனால் கொடுத்த வாக்கைக்
காப்பாற்றும் மணம் படைத்த மலர்
ஒன்றாவது அங்கு மலரவில்லையே!

முஸ்லிமே!
உனது உள்ளத்திலே வீரமில்லை.
உயிரிலே உணர்ச்சியில்லை.
பெருமானார் கொண்டு வந்த
தூதில் கொஞ்சமேனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது உன்னிடமில்லை.
பள்ளிகளிலே தொழுகைகள்
இடம் பெற்றாலும்,
பெருமானாரின் தொழுகையில் கண்ட
உயிர்த்துடிப்பில்லை.

"அஸ்ராரே குதி" என்ற அவரது நூல் ஆர். ஏ. நிகல்சன் 1940ல் மொழி பெயர்த்துள்ளார் . கவிஞரின் பாரசீகப் பாடல்கள் பலவற்றை ஆர்பரி என்பவர் ஆங்கிலத்திற்கு மொழியர்த்துள்ளார். தனது ஞான குருவான, பாரசீகப் பேரறிஞர், தத்துவஞானி ஜலாலுத்தீன் ரூமி அவர்களுடன் விண்ணுலகம் சுற்றிப் பலரைச் சந்திக்கும் பிரயாண நூலொன்றுபோல் அமைந்துள்ள பாரசீக மொழியிலான "ஜாவீது நாமா" என்ற நூலில் கீழைத் தேசங்களுக்கு நல்ல காலம் பிறக்கப்போகின்றது என்றவாறு ஆருடம் கூறப்பட்டுள்ளது. தவிர, இளைஞர்களை தட்டியெழுப்பி நல்வழிப்படுத்தும் கருத்துக்கள் இதில் நிறைந்துள்ளன. ஷிக்வா - வ ஜவாபே ஸிக்வா (முறையீடும் முறையீட்டின் பதிலும்) என்ற நூலொன்றையும் உருது மொழி யில் அவர் எழுதியுள்ளார்.

**பிள்ளைகளிடத்தில் அதிக பாசம்:**

முஹம்மது இக்பால் அவர்கள் மூன்று மனைவியரைத் திருமணம் செய்திருந்தார். முதல் மனைவிக்கு இரண்டு பிள்ளைகள், முதல் மனைவி காலமான பின்னரே இரண்டாவது திருமணம் செய்தார். இரண்டாம் மனைவிக்கு ஜாவீது என்ற மகனும், முனீராபானு என்ற மகளும் கிடைத்தனர். இரண்டாம் மனைவி 1935ம் ஆண்டு காலமான பின்னரே மூன்றாவது திருமணம் செய்தார். மூன்றாம் மனைவிக்குப் பிள்ளைகள் இல்லை.

முஹம்மது இக்பால் அவர்கள் தமது பிள்ளைகளிடத்தே அளவற்ற பாசம் வைத்திருந்தார். அடிக்கடி அறிவுரைகள் கூறி அவர்களை வழிநடாத்தினார்.

கலாநிதி மகாகவி சேர் அல்லாமா முஹம்மது இக்பால் அவர்கள் தமது மரணத்துக்கு முன்னரே மக்களால் பாராட்டி கௌரவிக்கப்பட்டார். 1938ம் ஆண்டு ஜனவரி மாதம் 9ம் திகதி அவருக்குப் பாராட்டு விழா கோலாகலமாக எடுக்கப்பட்டது.

அல்லாமா முஹம்மது இக்பால் அவர்கள் 1938ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 21ம் திகதி காலை தனது 60ம் வயதில் லாகூரில் காலமானார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

பாக்கிஸ்தான், லாகூரில் உள்ள "பாத்ஷாஹி மஸ்ஜித்" முன்றலில் அவரது ஜனாஸா நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புக் கவிதை:

# இறைபணியில் இணைந்த மகன்.

**- கலாபூஷணம்**
**பி.எம்.எம்.ஏ. காதர்.**

மௌனத்தை நினைத்துக்கொண்டு
மறுமைக்காய் பணிசெய்தாய்
இறைபணியில் இணைந்து
ஈமானோடு பணிபுரிந்தாய்.

இன்னல்கள் வந்தபோதும்
இறைவனிடம் ஒப்புவித்து
இன்னல் தீர
வெற்றி கண்டாய்.

நல்லாசானாய் தினம்
நற்பணி செய்து
மாணவர் மனங்களில்
நிறைந்து நின்றாய்.

கோபம் இல்லாமல்
கோடூர முகமில்லாமல்
நன்மை தீமையறிந்து
நல்ல பணிசெய்தாய்.

காணும் போதெல்லாம்
சலாம் சொல்லியென்னை
சாச்சா என்றழைப்பாய்
சாச்சியை வந்துபார்ப்பாய்.

உண்மை அன்பால்
உறவுகளை பேணி
அல்-குர்ஆன் வழியில்
ஆலோசனை முன்வைப்பாய்.

உம்மாவின் அருகிலமர்ந்து
உபதேசம் செய்வாய்
உம்மி நபிவழியில்
உணர்வுபூர்வமாய் மறுமைபற்றி.


ஊரே ஒன்றுகூடி
உன் நல்லடக்கத்தில்
நிறைந்து நின்றகாட்சி
உன்இறைபணிக்கு சாட்சி.

மண்ணறையில் உனக்கு
மகத்துவமான வாழ்வுமலர
ஐவேளை தொழுகையிலும்
ஆண்டவனிடம் கேட்கின்றேன்.

மகனே வலீத் முகம்மத்
மறுமையில் உனக்கு
மகத்துவமான வாழ்வு
மலர்ந்து மணம்வீச -

அல்லாஹ்விடம்
பிரார்த்திக்கிறேன்.

●



**2023-07-24ஆம் திகதி இரவு இறைவனடி சேர்ந்த**
**ஆசிரியர் எம்.எம்.வலீத் முகம்மத் அவர்களின்**
**மறைவையொட்டி எழுதப்பட்ட வரிகள் இவை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாம் கவிதைகளை ஆதரிக்கின்றது.

## - மருதூர் ஜமால்தீன் -



பல்வேறு வகையான அறிவுகளும் ஆற்றல்களும் சிந்தனைக்குரிய நூல்களும் நிறைந்திருக்கும் காலமிது. அறிவு நிறைந்திருக்கும் பாதைகள் எதுவானாலும் அதில் சென்று கற்றுக் கொள்ளவே இஸ்லாம் தூண்டுகின்றது. அந்த வகையில் இஸ்லாமிய த.்.வாப் பணியில் எழுத்துத்துறை, கவிதை இயற்றுதல், கட்டுரைகள், சிறுகதைகள் போன்ற சமூகத்திற்குப் படிப்பினையாகும் எவ்வகையான ஆக்கங்களையும் இஸ்லாம் ஆதரிக்கின்றது.

இவற்றில் கவிதைத் துறையை நாம் பார்க்கும் போது எமது சமூகத்தில் சிலர் இது தேவையற்ற வேலையென்றும் இஸ்லாம் கவிதை எழுதுவோரை சபிக்கின்றது என்றும் இஸ்லாமிய இலக்கியம் பற்றி அறியாத அல்லது புரிந்து கொள்ளும் அறிவுத்திறனற்று வாதங்களை முன்வைக்கின்றனர்.

**போற்றினும் போற்றுவர்; பொருள் கொடாவிடில்**
**தூற்றினும் தூற்றுவர்; சொன்ன சொற்களை**
**மாற்றினு மாற்றுவர்; வன் கணாளர்கள்**
**கூற்றினும் பாவலர் கொடிய ராவரே!**

என்ற பாடல் தரும் தன்மைகள், சில கவிஞர்களிடம் காணப்படுகிறது. (இப் பாடல் ஒரு சமயம் குலோத்துங்க சோழமன்னனால் கம்பன் மீது கோபம் கொண்டு பாடப்பட்டது.) சமூகத்திற்குத் தேவையான அல்லது படிப்பினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரக்கூடிய விடயங்களை கவிதையாக வடிக்காமல் சமூகத்திற்குத் தேவையற்ற கீழான மனோ இச்சைகளுக்கு மனிதனை நகர்த்தக் கூடிய கவிஞர்களையே இந்த வரிகள் சாடுகின்றன.

பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு இறைவன் கவிதையைக் கற்றுக் கொடுக்கவில்லை என்பதற்காக "கவிதையைக் கற்றுக் கொள்வது பாவம்" என்று எவரும் எண்ணிவிடக்கூடாது. எழுத்தறிவைக்கூட எம் பெருமானாருக்கு இறைவன் கற்றுக் கொடுக்கவில்லையென்பதனால் "எழுத்தறிவைக் கற்பது இணக்கமானதல்ல" என்றா நினைப்போம்?. மேலும் கூறுவதாயின் எழுத்தறிவைக் கற்பது இஸ்லாமிய ஆண் பெண் இருபாலார் மீதும் இன்றியமையாக் கடமையென்றுதான் நபிகளார் இயம்பியுள்ளார்கள். இவ்வாறே கவிதையைப் புனையவும் மேற்கோள் காட்டவும் கற்றுக் கொடுக்கப்படாத நபியவர்கள் கவிதையின் பால் கலப்பற்ற நேசம் வைத்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கவிஞர்கள் (அஷ்ஷுஅரா) எனும் தலைப்பில் அருள்மறையில் இடம் பெற்ற ஒரு அத்தியாயத்தின் இறுதியில் கவிஞர்களைக் குறித்து வரும் வசனத்தில் "வழிகெட்டவர்கள்தான் கவிஞர்களை (அவர்களின் கவிதைகளில்) பின்பற்றுகின்றனர். நிச்சயமாக அக்கவிஞர்கள் (வகை வகையான வார்த்தைகளென்ற திடல்களிலிருந்துமுள்ள) ஒவ்வொரு திடலிலும் தடுமாறித்திரிகின்றனர் என்பதையும் (நபியே) நீர் பார்க்கவில்லையா?" (அல்குர்ஆன் 26 : 224 - 226) என்று இறைவன் குறிப்பிட்டான்.

இத்திருவசனம் இறங்கியதும் அண்ணலாரின் அன்புக்குரிய கவிஞர்களில் ஒருவராகிய ஹஸ்ரத் கஃபு பின் மாலிக் (ரலி) அவர்கள் நபிகளாரைப் பார்த்து "யாரஸூலுல்லாஹ்! திருமறை கவிஞர்களைக் கடிந்துரைக்கிறதா?" எனக் கவலையுடன் கேட்டார்கள். உடனே நபியவர்கள் "நிச்சயமாக ஒரு முஃமின் தன் வாளாலும் நாவாலும் (மார்க்கத்திற்காகப்) போராடு கின்றான். என் உயிர் எவன் கைவசம் இருக்கிறதோ அவன் மீது ஆணையாக! நீங்கள் காபிர்களை நோக்கி வீசுகின்ற வசைக்கவிகள் அம்பின் கூர்முனையை எறிதலுக்கு ஒப்பாகும். (எனவே உங்களின் கவிதைப் பணி தொடரட்டும். தவறு இல்லை)" என்றார்கள். இதிலிருந்து திருமறையால் கண்டிக்கப்பட்ட கவிஞர்கள் இஸ்லாத்தை இழித்துரைக்கும் கவிஞர்களேயன்றி ஏனையோரல்ல என்னும் உண்மை தெளிவாகிறது. அக்காலக் கவிஞர்கள் இயற்றிய கயமைத்தன்மையற்ற நற் கவிதைகளைக் கேட்டு நபியவர்கள் மகிழ்ந்திருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டாக, ஒரு நிகழ்ச்சியை அம்ர் பின் ஷரீது (ரலி) எனும் ஸஹாபி தனது தந்தையார் மூலம் கேட்டறிந்து அறிவிக்கிறார்கள். அதாவது அம்ரின் தந்தையான ஷரீது (ரலி) எனும் ஸஹாபி ஒருமுறை ஒட்டகையில் நபிகளாருக்குப் பின்னாலமர்ந்து பயணம் செய்தார்கள். அந்நேரம் நபியவர்கள் ஷரீதைப் பார்த்து "ஷரீதே! உமக்கு உமையா பின் அபிஸ் ஸல்தின் (ஆரம்ப காலத்தில் இஸ்லாததை ஏற்காதவர்) கவிதைகளில் ஏதேனும் நினைவுண்டா?" எனக் கேட்டார்கள். உடனே ஷரீது அவர்கள் "ஆம்" என்றதும் பெருமானாரவர்கள் "பாடுக" என்றார்கள். ஷரீது அவர்கள் உமைய்யாவின் பாக்களிலிருந்து ஓரடியைப் பாடியதும் பெருமானார் அவர்கள் "மீண்டும் பாடுக" எனக் குறிப்பிட்டார்கள். இவ்வாறு ஷரீது அவர்கள் நூறு அடிகளைப் பாடும்வரை அவற்றைக் கேட்டுச் சுவைத்தார்கள். இந்நிகழ்ச்சியிலிருந்து அந்நிய மதத்தினர்களும் இயற்றிய கவிதைகள் தீய உணர்வைத் தூண்டவில்லையென்றால் அவற்றைக் கேட்டுச் சுவைப்பதில் தவறில்லை என்பதையும் நாம் உணர்ந்து கொள்ளலாம்.

நபி (ஸல்) அவர்களுக்கு கவிதை இயற்றக் கற்றுக் கொடுக்கப்பட வில்லையாயினும் பிறர் இயற்றிய கவிதைகளைப் பெரிதும் கேட்டு மகிழ்ந்ததுடன் கவிஞர்களைக் கவிதைகள் இயற்றத் தூண்டவும் செய்திருக்கிறார்கள் என்பது வரலாறாகும்.

"பானத்சுஆது" எனும் பாமாலை கவிதை இலக்கியத்தின் பால் பெருமானார் அவர்களுக்கிருந்த சுவை உணர்வையும் பாவலர்களைப் பாராட்டி ஊக்குவிக்கும் பான்மை அவர்களிடம் சுடர்விட்டது எனும் உண்மையையும் உணர்த்திக் கொண்டிருக்கிறது.

நபிகளார் அவர்களின் காலத்தில் வாழ்ந்த "கஃபு பின் ஸுஹைர்" எனும் ஒரு கவிஞர் தன் வசைக் கவிதை மூலம் பூமான் நபியின் பொன் மனதைப் புண்படுத்தி வந்தார். எனவே ஏந்தல் நபியவர்கள் கஃபைக் கண்ட இடத்தில் கண்டதுண்டமாக்குங்கள் என்று தம்முடைய அருமைத் தோழர்களுக்கு ஆணை பிறப்பித்தார்கள். இதனால் கவிஞர் கஃபின் சிரத்தைச் சீவிட சிறுத்தை நிகர் வீரர்களாம் ஸஹாபாக்களின் வாட்கள் உறையை விட்டு வெளியேறின. தன் தலையைக் கொய்திட ஸஹாபாக்கள் தயார் நிலையிலிருக்கும் தகவலறிந்த கவிஞர் கஃபு தலைமறைவானார். நாட்கள் பல நகர்ந்தன. ஒரு நாள் உற்ற தோழர்களுடன் நபிகளார் அமர்ந்திருக்கையில் முன் அறிமுகமில்லாத ஒருவர் அந்தப் பேரவைக்கு வந்து "அல்லாஹ்வின் தூதரே! புனித இஸ்லாத்தைத் தழுவிய ஒரு வேற்றுமதத்தவரின் பிழைகள் பொறுக்கப்படுமா?" எனக் கேட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபியவர்கள் "ஆம். மன்னிப்பு உண்டு." என்றதும் "கவிஞர் கஃபுக்கும் இத்தகைய மன்னிப்பு உண்டா?" என்று வந்தவர் தன்னுடைய இரண்டாவது வினாவை விடுத்தார். உடனே நபியவர்கள் நகைமுகம் காட்டி "ஆம். கஃபுவாக இருந்தாலுங்கூடக் கண்ணிய இஸ்லாத்தைத் தழுவிவிட்டால் கடந்த காலப் பிழைகளுக்கு மன்னிப்பு உண்டு" என்றுரைத்தார்கள்.

உடனே அந்தப் புதிய மனிதர் பெருமானாரைப் பார்த்து மிகவும் பணிவாக "நான்தான் அந்த கஃபு" எனக் குறிப்பிட்டபோதுதான் வருகை தந்த அந்தப் புதிய மனிதர் மாறுவேடத்தில் இருக்கும் கவிஞர் கஃபு என்ற உண்மை பெருமானாரைச் சூழ்ந்திருந்த தோழர்களுக்குப் புலப்பட்டது. இதனால் நபித்தோழர்கள் சூறாவளியாகக் கிளம்பத் தொடங்கினர். சபையில் சிறிது நேரம் சலசலப்பு ஏற்பட்டது. வீறுகொண்ட உமர் (ரலி), அலி (ரலி) என்ற வீர வேங்கைகளின் கூரிய வாட்களெல்லாம் கணப்பொழுதிற்குள் கவிஞர் கஃபின் தலையைப் பதம் பார்க்கத் துடித்தன. உடனே உத்தமத் திருநபியவர்கள் அனைவரையும் அமைதியாக அமர்ந்திட ஆணை பிறப்பித்தார்கள். அந்நேரம் அங்கே நிகழ்ந்தது ஒரு பேரற்புத நிகழ்ச்சி.

பூமான் நபியின் பூமனத்தைக் கவிதை அம்புகளால் குத்திய கவிஞர் கஃபின் மனம் உருகியது. கண்களில் கண்ணீர் பெருகியது. கழிவுக் கவிதைகள் வலம் வந்த வாயைக் கண்ணீரால் கழுவினார். கழுவாய் தேடினார். மாநபியின் மலர்க் கரம்பற்றி மன்னிப்பை நாடினார். மாண்பார் இஸ்லாத்தையும் மணந்தார். தன் மனத்தின் மங்காத சின்னமாக அறுபத்து மூன்று இதழ்களால் தொடுக்கப்பட்ட ஒரு புகழ் பாமாலையைப் பூமான் நபிக்குப் புனைந்து புளகாங்கிதம் அடைந்தார். அண்ணலார் அவர்கள் ஆனந்தம் பொங்கியெழத் தம் அழகு மேனிக்கு அணி செய்த மேலாடையை எடுத்து கவிஞருக்குப் போர்த்தி, கவிஞர்களுக்குப் பொன்னாடை போர்த்தும் இன்றைய நடைமுறைக்கு முன்னோடியானார்கள்.

நபிகளாரின் திருமேனியில் தவழும் ஆடையினைப் பரிசாக பெறுகின்ற பெரும் வாய்ப்பு கிடைக்காதா? என்று நெருங்கிய தோழர்களே விரும்பித் தவம் கிடக்கையில் பெருமானாரின் மிகுந்த வெறுப்புக்குள்ளாகி வந்த ஒரு கவிஞர் இஸ்லாத்தை ஏற்ற பின்னர் ஒரு புகழ் மாலை மூலம் நபி அவர்களை கவர்ந்து அவர்களின் பொன்னாடையை பெறும் பேறு பெற்றாரெனில் நபிகளார் அவர்கள் எந்த அளவுக்கு நற்கவிதைகளை நயந்துள்ளார்கள் என்பதை எம்மால் உணர முடிகிறதல்லவா?

"கருணை நபிகளாருக்கு கவிதை இயற்ற நாம் கற்றுக் கொடுக்கவில்லை" என்று இறைவன் கூறுவதால் பெருமானாரின் திருவாய் மொழிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதையைப் போன்ற நடையில் எதிர்பாராமல் அமைவது கூட இல்லை என்று யாரும் எண்ணிவிடக் கூடாது. "யாப்பிலக்கண மரபுப்படி கவிதையினைத் திட்டமிட்டு இயற்றுவதற்குத்தான் நாம் கற்றுக் கொடுக்கவில்லையே தவிர, உத்தம நபிகளார் உதிர்க்கும் சொற்கள் கவிதையைப் போன்று சொற்சுவையுடன் அமைவதற்கு நாம் தடை விதிக்கவில்லை" என்று மேற்கண்ட திருமறை வசனத்திற்கு விளக்கம் அமைந்துள்ளது.

நபி (ஸல்) அவர்களின் கவிதை வரிகள்:-

உஹதுப் போரின் போது கல்லடி பட்டமையால் உதிரம் சிந்திய கைவிரலைப் பார்த்து நபிகளார்,

"நீ உதிரம் சிந்தும் விரலாக அன்றி வேறுண்டோ?
நீ சந்தித்த உதிரம் அல்லாஹ்வின் பாதையில் அன்றி
வேறு பாதையில் இல்லையே"

என்று கவிதை வடிவில் கனிவாய் மலர்ந்தார்கள்.
அறிவிப்பாளர்: ஜுன்துப் (ரலி) (நூல்: புகாரி மற்றும் முஸ்லிம்)
அகழிப் போரில் தமதருமைத் தோழர்களுடன் இணைந்து வயிற்றில் புழுதி படியும் அளவுக்கு மாநபியவர்கள் மண் வெட்டிய போது, "அல்லாஹ்வின் மீது ஆணையாக அவனருள் இல்லையெனில் நாம் நேர்வழி பெற்று தொழுது தானங்கள் வழங்கியிருக்கமாட்டோம். எனவே இறைவா அடக்க உணர்வை எம்பால் இறக்கிவைத்து நாங்கள் சந்திக்கும் போரில் புறமுதுகிட்டு ஓடாமல் எமது பாதங்களை உறுதிப்படுத்துவாயாக! நிச்சயமாக மக்கவாசிகளான அவர்கள் எங்களிடம் அத்துமீறியுள்ளனர். அவர்கள் குழப்பத்தை நாடும் போது நாம் அவர்களைத் தடுப்போம்" எனும் பொருள்பட பா வடிவில் பகர்ந்தார்கள்.
அறிவிப்பாளர்: பராஉ (ரலி) (நூல்: புகாரி மற்றும் முஸ்லிம்)

ஹுனைன் போரின் போது,
"நான் நபியாவேன் பொய்யில்லை
நான் அப்துல் முத்தலிபின் பேரனாவேன்"
எனும் பொருளில் வீர கவி பாடினார்கள்.

அகழ்ப் போரின் போது,
அன்சாரிகள் மற்றும் முஹாஜிர்களான ஸஹாபாக்கள் அடிமைகளின் துணையின்றி பனி படர்ந்த ஓர் அதிகாலைப் பொழுதில் பசியையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பளுவையும் பாராது அகழ் வெட்டினர். இதைப் பார்த்த நபிகளார் தமது தோழர்களை ஊக்குவிக்கும் நோக்கில்,

"அல்லாஹ்வே நிச்சயமாக! (நிலையான) வாழ்வு மறுமை வாழ்வுதான் எனவே அன்சாரிகளை முஹாஜிர்களை மன்னித்திடுவாயாக!"
எனும் பொருளில் கவிதை வடிவில் கனிவாய் மலர்ந்தார்கள்.
அறிவிப்பவர்: அனஸ் (ரலி) (நூல்: புகாரி மற்றும் முஸ்லிம்)

மேற்கண்ட ஹதீஸ்களின் வாயிலாக "யாப்பு வழிக் கவிதை யாத்திடத்தான் பெருமானாருக்கு இறைவனால் கற்றுக் கொடுக்கப்படவில்லையே தவிர, கவிதை வடிவில் கருணை நபியின் சொற்கள் உதிர்வதற்குத் தடைவிதிக்கப்படவில்லை" என்று தெரியவருகிறது. நபிகளாருக்கு "நாம் கவிதையைக் கற்றுக் கொடுக்கவில்லை. அது அவர்களுக்குத் தேவையுமில்லை எனக் கூறிவிட்டு பெருமானார் அவர்கள் கவிஞருமல்ல அவர்களால் ஓதிக் காட்டப்பட்டு வரும் உயர்மறை குர்ஆன் கவிதையுமல்ல" என்று உணர்த்திய இறைவன் அதைத் தொடர்ந்து "இது நற்போதனையும் (நன்மை தீமைகளைத்) தெளிவாக்கும் குர்ஆனுமேயல்லாமல் வேறில்லை" என்று உறுதிப்படுத்துகிறான்.

"கவிதைகளுக்கும் கவிஞர்களுக்கும் இஸ்லாம் எதிரானதல்ல. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் கவிஞர் என்று அழைக்கப்படும் ஹஸ்ஸான் (ரலி) அவர்களுக்காக பள்ளிவாசலில் ஒரு மேடை அமைக்கப்பட்டு அதில் நின்று இஸ்லாத்தின் மேன்மைகளையும் நபியவர்களின் பண்புகளையும் அவர் பாடுவார்" என நபிமொழியின் விரிவுரைகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன. கவிஞருக்கு மேடையமைத்துக் கொடுத்து கவிபாடச் சொன்ன மார்க்கம்தான் இஸ்லாம்.

மேலும் சில விடயங்கள் எமது சிந்தனைகளுக்காக. இஸ்லாத்தில் கவிதை கூடுமா? கூடாதா? என்பதில் கவிதை கூடும் என்பதற்கான சான்றுகள் சிலவற்றைப் பார்ப்போம்.

"நிச்சயமாக கவிதையிலும் ஹிக்மத் - ஞானம் உண்டு" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
(நூல் : புகாரி 6145)

பனூ குறைழா போரின் போது கவிஞர் ஹஸ்ஸான் பின் ஸாபித் (ரலி) அவர்களிடம் "எதிரிகளுக்கு எதிராக வசைக் கவி பாடுங்கள். ஜிப்ரீல் உங்களுடன் (உறுதுணையாக) இருப்பார்" என நபி (ஸல்) அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியதை நான் கேட்டேன். (நூல்: புகாரி)

மேலும் மக்காவை துறந்து மதினா வந்த போது நபித்தோழர்கள் அபூபக்கர் (ரலி), பிலால் (ரலி) ஆகியோருக்கு காய்ச்சல் ஏற்பட்டு தங்கள் உடல்நலக் குறைவை கவிதை நடையில் கூறினார்கள். (நூல்: புகாரி)

கவிதை பாடுவது இஸ்லாத்துக்கு எதிரானது அல்ல என்றும் கவிதையையும் கவிஞரையும் உற்சாகமூட்டும் மார்க்கமே இஸ்லாம் என்பதையும் பல நபிமொழிகள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது. "இஸ்லாத்தின் எதிரிகளுக்கு பதிலடி கொடுத்துக் கவி பாடும்போது வானவர்கோன் ஜிப்ரீலைக் கொண்டு கவிஞருக்கு இறைவன் வலுவூட்டுகிறான்" என்ற அறிவிப்பு இங்கு குறிப்பிடத்தக்கது.

கவிஞர்களின் சொற்களிலேயே மிகவும் உண்மையான சொல் கவிஞர் லபீத் சொன்ன,
"அறிக அல்லாஹ்வைத் தவிர அனைத்துப் பொருட்களுமே அழியக்கூடியவையே" எனும் பாடல்தான் என்று நபி (ஸல்) கூறினார்கள். (நூல்: புகாரி மற்றும் முஸ்லிம்)

ஆமிர் (ரலி) கவிஞராக இருந்தார்கள். அவர்கள் (தமது வாகனத்திலிருந்து) இறங்கி மக்களுக்காகப் (பின்வரும் யாப்பு வகைக் கவிதையை) பாடி அவர்களின் ஒட்டகங்களை விரைந்தோடச் செய்தார்கள்.

"இறைவா நீ இல்லை என்றால் நாங்கள்
நேர்வழி பெற்றிருக்க மாட்டோம்
தர்மம் செய்திருக்கவு மாட்டோம்
உனக்காக (எங்களை) அர்ப்பணம் செய்கிறோம்
உன் வழியைப் பின்பற்றும் வரை
எங்களை மன்னிப்பாயாக!
நாங்கள் (போர்க்களத்தில் எதிரியைச்) சந்திக்கும் போது
எங்கள் பாதங்களை உறுதிப்படுத்துவாயாக!
(அறவழியில் செல்ல)
நாங்கள் அழைக்கப்பட்டால்
நாங்கள் (தயாராக) வந்து விடுவோம்
எங்களிடம் மக்கள் (அபயக்) குரல்
எழுப்பினால் (உதவிக்கு வருவோம்)"
என்று பாடிக்கொண்டிருந்தார்கள். (வழக்கம் போன்று பாடலைக் கேட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டகங்கள் விரைந்தோடலாயின.) அப்போது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் “யார் இந்த ஒட்டகவோட்டி?” என்று கேட்டார்கள். மக்கள் “ஆமிர் இப்னு அக்வ.்.” என்று பதிலளித்தனர். அப்போது “அல்லாஹ் அவருக்கு அருள் புரிவானாக” என்று நபி (ஸல்) கூறினார்கள்.
*(நூல்: புகாரி-6148 மற்றும் முஸ்லிம்-3695)*

இது போன்ற சம்பவங்கள் நபிகளார் காலத்திலும் ஸஹாபாக்கள் காலத்திலும் நிறைந்திருப்பது அறிவோர்கள் தெரிந்து கொள்வர்.

கவிதைகளை இஸ்லாம் ஆதரிக்கிறது என்றால் இஸ்லாம் விதிக்கும் ஒரே நிபந்தனை கவிதையில் உண்மை இருக்க வேண்டும். கவிதை என்ற பெயரில் கற்பனைக் குதிரையைத் தட்டி விட்டு பொய்யையும் புரட்டையும் இட்டுக்கட்டக் கூடாது. கவிதையின் இலக்கணம் அதன் ஒவ்வொரு வாசகத்திலும் இருக்க வேண்டும். இதையே இஸ்லாம் விரும்புகின்றது. ஒரு கவிதை அனுமதிக்கப்படுவதும் நிராகரிக்கப்படுவதும் அது சொல்லக்கூடிய தகவலைப் பொறுத்தே அமையும். இறையுணர்வு, இறை வாழ்த்து, நல்லறம், அறநெறிகள் போன்ற நல்ல கருத்துக் கொண்டதாக இருந்தால் அது அறியாமைக்கால கவியாக இருந்தாலும் இஸ்லாம் வரவேற்கிறது.

உண்மையான உயிரோட்டமான நல்ல கவிதைகளைப் பாடுவதையும் கேட்பதையும் குர்ஆன், ஸுன்னா தடை செய்யவில்லை. உண்மைக்குப் புறம்பாக கற்பனை கவி வரிகளுக்கு வார்த்தைகளைத் தேடிப் புனைவதும், கவிதை என்ற பெயரில் பெண்களின் அங்கங்களை வர்ணிப்பதும் குர்ஆன் ஸுன்னாவுக்கு எதிரானவையாகும். இப்படியான புனைவுக் கவிதைகளில் எந்நேரமும் மூழ்கிக் கிடக்கும் கவிஞனின் வயிறு கவிதையால் நிறைந்திருப்பதை விட சீழ் சலத்தால் நிறைந்திருப்பது எவ்வளவோ மேல் என்ற கருத்தை இஸ்லாம் சொல்லிக் கண்டிக்கிறது.

அவ்வாறான கவிதைகளையும் கவிஞர்களையும் விட்டு நாம் விலகிக் கொள்ள வேண்டும்.


எனவே,
கவிஞர்களையும் கவிதைகளையும் தீ மனத்தோடு பார்க்காமல் அதுவும் ஒரு த.்.வாப் பணி எனும் நல்லுள்ளத்தோடு அவற்றை அணுகி அவர்களை ஊக்குவிக்கும் சிந்தையறிவுள்ள மனத்தோராக மாறி சமூதாயப் பணி புரிந்திட முன் வருவோமாக!

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களிடமிருந்து







- கிடைக்கப் பெற்றேன்.

வெண்ணிலா - கவிதை மஞ்சரி இதழ் 10 கிடைக்கப் பெற்றேன்.

52 பக்கங்களில் ஒரு கவிஞர் படையை உள்ளடக்கிக் கொண்டு வந்திருக்கிறார் ஆசிரியர்.

அட்டைப்பட முக்கியஸ்தர்களில் எம். வை. எம். முஸ்லிம் அவர்கள், கவிஞர் எம். சி. எம். ஸுபைர், ஆகியோரைப் படித்தும் கேட்டு முள்ளேன்.

எம். ஐ. எம். முஸம்மில் நல்ல எழுத்தாளர். அவரது எழுத்துகளைச் சிறுவயதில் படித்துள்ளேன். சந்தித்த தில்லை.

ஐ. ஏ. சத்தார் ஒரு காலத்தில் நளீமியா நூலகத்தில் உதவியாளராகப் பணி செய்தவர். செம்மைத்துளியான் என்ற பெயரில் அவர் நல்ல சிறுகதைகளை எழுதி வந்தார். பிற்காலத்தில் அவரைச் சந்திக்கக் கிடைக்கவில்லை.

நியாஸ் ஏ. சமத் கொழும்பில் எமது இலக்கிய அணியில் இணைந்து செயல்பட்டவர். இஸ்லாமிய இலக்கிய மாநாட்டுக் குழுவில் இயங்கியவர். ஏ. எம். கஸ்புள்ளாஹ் பற்றி இப்போதுதான் அறிய வருகிறேன்.

எனது படைப்பொன்றையும் சேர்த்துக் கொண்டதற்கு ஆசிரியருக்கு நன்றி. ஆசிரியரது முயற்சிக்கு எனது பாராட்டுகள்.

சஞ்சிகையை முழுமையாக இன்னும் படிக்கவில்லை. மேலோட்டப் பார் வையில் கவிதை எழுதும் புதிய தலைமுறை தம்மை மேலும் வாசிப்புக்கு உட்படுத்திக் கொள்ள வேண்டும்.

**- கவிஞர், எழுத்தாளர்**
**அஷ்ரஃப் சிஹாப்தீன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● எழுத்தாளர் எம்.ஐ.எம். முஸம்மில் அவர்களின் மர்ஹூம் எம். வை. எம். முஸ்லிம் சேரைப் பற்றிய கட்டுரை மிக அருமை.

அவரது கற்பித்தல் ஆளுமையை சொற்களில் வார்த்திட முடியாது. எனது கற்பித்தற் செயற்பாட்டுக்கு முன்னோடி. அல்லாஹ் அவரைப் பொருந்திக்கொள்வானாக. அவர் ஒதுங்கிய இடத்தை சுவனப் பூஞ் சோலையாக ஆக்குவானாக.

**- கவிதாயினி மாஹிறா அஸ்ஹர்**
**ஓய்வுநிலை ஆசிரியை,**
**கம்பளை.**

● நன்றியும் வாழ்த்துகளும். மேலும் இலக்கியப் பணியில் இச் சிற்றிதழ் பலரது உள்ளங்களை கவரும் வகையில் ஆக்கங்கள் நிறைவு பெற்றுள்ளன. தொடரட்டும் சேவை. பின்னால் நாமும் சேர்ந்து பயணிப்போம்.

**- எழுத்தாளர் ஏ.எம். கஸ்புள்ளா.**

● வெண்ணிலா இதழ் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி. நூல் கனதியான விடயங்களை உள்ளடக்கியதாக உள்ளது.

**- பாவேந்தல் பாலமுனை பாறூக்.**

● மனம் மகிழ்கின்றோம். உங்கள் மகத்தான சேவைக்கு மனமார்ந்த நன்றி.

**- கவிஞர் சுலைமாலெவ்வை சின்னத்தம்பி பொத்துவில்.**

● வளர்ச்சி தொடர மனமார்ந்த வாழ்த்துக்கள்!

**திரு. G.V. ஞானசூரியம்**
**ஓய்வுநிலை சிரேஷ்ட முகாமையாளர்,**
**இலங்கை வங்கி.**

● மனம் மகிழ்ச்சியுடன் என்னுடைய வாழ்த்துக்கள்.

**அல்-ஹாஜ் எச். எல். நஜிமுத்தீன்**
**ஓய்வுநிலை முகாமையாளர்,**
**இலங்கை வங்கி.**

● வளர்ந்து வரும் கவிஞர்களுக்கு சிறந்த களமமைத்துக் கொடுத்து வரும் வெண்ணிலாவுக்கு!

இலை மறை காயாக இருந்த என்னை வெளியுலகில் திகழ வைத்த வெண்ணிலா கவிதை மஞ்சரிக்கும் அதன் ஆசிரியர் அவர்கட்கும் முதலில் வாழ்த்துகளையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைந்து நிற்கின்றேன்.

வெண்ணிலா கவிதை மஞ்சரி இதழ் 9இல் எனது கவிதையான "எனது அம்மா" என்ற கவிதை பிரசுரமாகி இருந்தது. உண்மையிலேயே மிக்க மகிழ்ச்சியடைவதோடு இதழ் 9 மற்றும் இதழ் 10 எனது கரங்களில் வந்து தவழ்ந்ததையிட்டும் மனமகிழ்வுறும் இவ்வேளையில் வெண்ணிலாவுக்கு எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

இதுவரை வெண்ணிலா கவிதை மஞ்சரி பத்து இதழ்கள் வெளிவந்துவிட்டன.

ஆசிரியரின் முயற்சியும் வாசகர்களின் ஒத்துழைப்பும்தான் இந்த வெற்றிக்குக் காரணம்.

வெண்ணிலா கவிதை மஞ்சரி எந்த தடங்கலுமின்றி தொடர்ந்து வெளிவர வாழ்த்தி வரவேற்று நிற்கின்கிறேன். நன்றி.

**கவிஞர் த. நடேஸ்**
**பெரியநீலாவணையூர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஞ்சரி கவிதைகள்

# எல்லாமே அவனது நாட்டம்!

விடியலில் நெருப்பாய் வெந்து நின்றாள்
விரையுமிருளில் குளிரினை தந்து நின்றாள்
மடியினில் சுமந்த மிடியினை தனது
மனதினில் போட்டு மறைத்து நின்றாள்!

குடியது புகுந்த மனையதின் குலம் சிறக்க
குடையாக தன்னை விரித்து நின்றாள்
நெடுந்தூரப் பயண மிந்த வாழ்வில்
நெகிழ்ந்தும் நிமிர்ந்தும் தேறிக் கொண்டாள்!

பிள்ளைகளை பண்புடன் வளர்த்துக் கொண்டாள்
பிறருடன் அன்புடன் நடந்து கொண்டாள்
அல்லலப்படும் மனிதரை கண்ட போதில்
அகமகிழ்ந்து ஈதலில் இன்பம் கண்டாள்!

உறவதை பிரியாமல் தொடர்பு வைத்தாள்
உயிரதை நேசிக்கும் உள்ளம் கொண்டாள்
நிறபேதம் சாதிகள் வெறுத்து நின்றாள்
நிழலற்ற வாழ்வாலே என்நெஞ்சில் நின்றாள்!

கல்வியே சொத்தெனக் கருதிக் கொண்டாள்
கடமைகள் தவறாது தொழுது நின்றாள்
இல்லாளில் எத்தனை அழகிய மாற்றம்
எல்லாமே இறையருள் சார்ந்த நாட்டம்!

●

**- கவிச்சுடர் ஏ.எம். கஸ்புள்ளா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்படித் தேற்றுவேன்.

காக்காய் கத்துது
கால் வெச்சி அடியளந்து பாருமகள்
சின்னவன் வந்துருவான்
சில துளிக் கண்ணீர்கள்
சிந்தின அக் குழிவிழுந்த கண்கள்.

மூத்தவன் அண்ணா
அடுத்தடுத்து ஐந்து பெண்கள்
ஆளுக்கொரு பெயரில்
அடுத்தவன் நான்
கடைக்குட்டி தம்பி
செல்லப் பெயர்தான் சின்னவன்
அறிவில் அவனோர் இமயம்
ஆற்றலில் தொழிநுட்ப வல்லோன்
இனவெறி வேட்டைப் பற்களில்
இருபத்தொரு வயதில் இல்லாமல் போனான்.

இப்போ
அம்மாவுக்கு வயது தொண்ணூற்றிமூன்று
அம்மா... அம்மா... அம்மா... என்கிறேன்
தம்...பி... தம்...பி
நீயாவது அடியளந்து பாருமனே
காக்காய் கத்துது... என்னமோ தெரியா
சின்னவன் வந்துருவான்
பசி பொறுக்கமாட்டான்
எட்டிப் பாருடா
என்னிதயம் வெடித்து குருதி சொட்டுகிறது
எப்படித் தேற்றுவேன்
என் தாயை
எப்படித் தேற்றுவேன்.

●

**- பைந்தமிழ்க்குமரன்.**
பாண்டிருப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுண்ணுயிரே இனி வேண்டாம்!

விண்ணதனைத் தொட்டெழுந்து
வெண்ணிலவில் கால் பதித்த
விஞ்ஞானத் திமிர்கண்டும்
வேற்றுமைகள் பல கொண்டும்
இனங்களெனப் பிரிவுண்டு
வாழுகின்ற வாழ்வதனை
வெறுத்திட்ட பூமாதா - தன்
பொறுமைக்கு எல்லையிட்டு,
பூலோக மைந்தரிடை
பரப்பிவைத்த நுண்ணுயிரை
பாரினிலே இனி வேண்டாம்
எனக்கரங்கள் ஏந்திடுவோம்!

உயர்வானைத் தொடுமலையில்
வந்துலவும் மேகமதில்
காணுகின்ற வண்ணமெலாம்
வடிக்கின்ற கவிதைகளைப்

புறந்தள்ளி நகரவைத்து
வஞ்சமது கொண்டுலவும்
நெஞ்சங்களை இனங்கண்டு
கனிவோடு கற்பித்து
வாஞ்சையுடன் கவியார்த்து
வீட்டுக்கும் நாட்டுக்கும்
வாழ்கின்ற வையத்திற்கும்
நல்லவர்களாய் வல்லவர்களாய்
அச்சாணியாய் ஆக்குகின்ற
அருங்கவிகள் ஆக்கிடுவோம்
வெண்ணிலா நல்லிதழில்
வேகமதாய்ப் போட்டிடுவோம்!

●

**- செம்மைத்துளியான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தம்புது மாலை பொன்னிற வேளை...

அந்தி வானமும் அடர் சிவப்பும்
ஆனந்தக் கூத்தாடி அமைதியில் திளைத்து
சிந்தும் கதிரொளியோடு சினேகம் பூண்டிட
சிந்துபாடியே சிட்டுகள் கூடு சேர்ந்திடும்

செந்தூரம் பூசிய செக்கல் வேளையில்
சிலாகித்து மனம் கவிதை தேடிட
மந்திரக்காட்சியில் மதி மயங்கிய நிலையில்
மாந்திப் பருகிய மாலையென் அலைபேசியில்

அந்தி வானத்தில் சூரியன் இறங்கிட
ஆகாயம் முழுவதும் வண்ணம் குழைத்திட
ஏந்திக் கொள்ளுங்கள் இரண்டு விழிகளில்
ஏட்டினில் வரையா இறைவனின் காட்சியை

சாலைப் பயணத்தில் சிந்தை லயித்திட
சரியும் மேற்கில் வெயிலும் பணிந்திட
மாலையின் ரம்மியம் சஞ்சலம் துடைத்திட
மனதிலே நிம்மதி மதிக்கொரு வெகுமதி

செந்தழலோன் சிறப்பாய் வானத்தில் மறைந்திடும்
சீரிய காணொளி இதயத்தை அள்ளிடும்
சிந்தனையில் களிப்பும் சில்லென்று ஊறிடும்
செப்பிட வார்த்தைகள் சுனைபோல் பீறிடும்.

●

- Dr. ஜலீலா முஸம்மில்.
ஏறாவூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னை அறிந்தால்!

ஏற்றங்கள் வாழ்வில் வந்தால்
எட்டி அதைப் பிடித்துவிடு
மாற்றங்கள் தோன்றிவிட்டால்
வெட்டி அதை எறிந்துவிடு!

திறமைகள் விழித்துக்கொண்டால்
தினமும் நீ பயிற்சி எடு
வறுமைகள் உனை சூழ்ந்தால்
வருத்தமின்றி கடந்துவிடு!

இயலாமையில் நீ இருந்தால்
இயலுமானதில் திருப்திப்படு
முயலாமை குடியிருந்தால்
முடிந்தவரை விரட்டிவிடு!

பரிகாசம் செய்பவர் கண்டால்
பக்குவமாய் விலகிவிடு
பரிதாபம் பார்ப்பவர்களிடம்
பத்திரமாய் பழகிவிடு!

கல்லாமையில் நீ இருந்தால்
கலக்கமின்றி பயின்றுவிடு
இல்லாமையில் நீ இருந்தால்
இருப்பதிலே பெருமைப்படு!

இரக்கமுள்ள மனமிருந்தால்
பெற்றோருக்காய் இரக்கப்படு
சிறப்பான குணம் இருந்தால்
மற்றவரை மதித்துவிடு!

காதல் நதியில் நீ விழுந்தால்
காலூன்றி எழுந்துவிடு
மோதல் தோன்றும் தருணத்தில்
மோசமின்றி நடந்துவிடு!

உலகில் சிறப்பாய் வாழ்வதற்கு
உன்னை நீயே அறிந்துவிடு
உன்னை நீயே அறிந்துகொண்டால்
உச்சம் ஏறி சிகரம் தொடு!!!

●

- வெலிகம
ரிம்ஸா முஹம்மத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியைக் குவித்து வீறுநடைபோடு!

பெண்ணே..

தடைகள் ஆயிரம் படையெடுத்த போதும்
தரணியில் பயணம் தொடர்ந்திடச் செய்
அச்சம் மடம் பெண்ணின் உடமை
அகிலத்தில் வாழ்ந்திட அறிவே துணை

எண்ணிய இலக்கை அடைந்திட நாளும்
திண்ணிய நெஞ்சுடன் தளராது போராடு
பெண்டிர் ஒன்றும் கோழைகள் அல்ல
துணிந்து வென்றிடும் கர்வம் கொள்

உண்டி சுருங்கிடத் தினமும் உழைத்து
உடம்பை வறுத்தும் துயர்தனை மறந்திடு
அன்பை விதைத்து ஆறுதல் தந்து
அவனியில் மக்களை அரசாட்சி செய்

கொண்டவன் மனதைக் கருத்தாய்ப் படித்து
பண்புடன் அவனைச் சதாவும் மதித்திடு
ஏற்றத் தாழ்வுகள் எதிர் வந்த போதிலும்
மாற்றுக் கருத்தின்றி வரவேற்று வாழ்

முடியாமை என்பதை மனதில் அகற்றி
உறுதியாய் முயன்று வாகை சூடிடு
குரோதம் துரோகம் நிலைக்க விடாமல்
துரோகிகளை அழித்திடும் மனத்திடம் கொள்

பெண்மைக் கேற்ற மானம் காத்தே
வெற்றியைக் குவித்து வீறுநடை போடு.

●

**- மாஹிரா ஹமீட் அஸ்ஹர்.**
கம்பளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயத்தை மீறிய சொற்கள்.

கவிதை எழுத வராதென்றெண்ணி
கண்டபடி கிறுக்கிய வரிகளை
"அபாரம்..."
எனக் கூறிவிட்டு நகருகிறது
தற்காலம்.

காலம்
பொய்யுரைப்பதில்லை
ஒருபோதும்!

வேளையும் நேரமும்
விரைவில் பொருந்திய வகையில்
நேற்றைய அனுபவங்கள் பலவும்
மனவுணர்வூடாக
வெளிப்பரப்பில் வந்தன
சொல்லடுக்குகளாக.

அவைகள்
வெண்தாள்களில்
வரிசைகட்டி நகர்ந்தபோது...
சிற்பமாய் செதுக்கப்பட்டன
ஒரு கவிதை வடிவமாக!

எதுவும் எழுத வராதென்றே
இயங்கியலைத் தடுத்த
ஓர் அறியாமை இப்போ
வெட்கித்துக் குந்தியிருக்கின்றது
மனமூலையருகோரம் ஒன்றில்.

●

**- அலெக்ஸ் பரந்தாமன்,**
புதுக்குடியிருப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்முனைக் கவிதைகள்.

என்னை செதுக்க
துயரம் சுமந்தார்
அப்பா மரணித்தும்
நினைவுகளாக உயிர் வாழ்கிறார்.

●

மறைமுகமாகப் பேச்சு
நஞ்சை விதைக்கும்
வெளிப்படையான பேச்சு
நேசம் வளர்க்கும்.

●

காந்தமாய்க் கவருகிறாய்
கற்பனைகளை விதைக்கிறாய்
இதையங்கள் பரிமாற
தூது விடுகிறாய்.

●

சிறந்த பண்பாடு
உறவை வளர்க்கும்
ஒற்றுமை பேணுவதால்
பகைமை உணர்வு நீங்கும்.

●

கருணை காட்டு
நன்மை பெறுவாய்
செய்யும் உதவியால்
மனங்களை வெல்வாய்.

பரபரப்பை ஏற்படுத்தும்
சதுரங்க ஆட்டம்
வெற்றி வியூகம்
இறுதிவரை நீடிக்கும்.

●

நல்லவனாக மிளிர்ந்தால்
மரியாதை கிடைக்கும்
கெட்டவனாக வாழ்ந்தால்
அவப்பெயரே பரிசாகும்.

●

மலர்ந்த விடியல் பொழுது
மனதுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது
உதிரம் சிந்தி உழைக்க
உடலுக்கு உற்சாகம் பிறக்கிறது.

●

மன்னிப்பு என்பது
மகத்தான பண்பாகும்
நேசத்தை வளர்க்கும்
இனிய குணமாகும்.

●

காதல் மயக்கம்
கற்பனையை வளர்க்கும்
கனவு நனவாக
உள்ளம் தவிக்கும்.

**- நழீம் ஹனீபா, ஒலுவில் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹைக்கூ கவிதைகள்.

வளைந்து செல்லும் பாதை
பளிச்சென்று தெரிகிறது
வானில் சூரியன்.

●

அளவுக்கு அதிகமான தேடல்
அழிவை வரவழைக்கிறது
மனதில் எழும் பேராவல்.

●

அழகிய மணற் சிற்பம்
பிரமிக்க வைக்கிறது
கலைஞனின் திறமை.

●

பகல் வெளிச்சம்
மெல்ல மெல்ல மறைக்கிறது
அந்திச் சூரியன்.

●

விரிந்த பச்சை மரம்
உயர்ந்து தெரிகிறது
தூரத்தில் மலைத் தொடர்.

பாயும் மலையருவி
பரவசம் தருகிறது
பசுமைச் சூழல்.

●

பெருக்கெடுத்து ஓடும் நதி
அச்சம் தருகிறது
மண்சரிவு அபாயம்.

●

ஆற்றங்கரையோர வீடு
நீரில் தலைகீழாகத் தெரிகிறது
படகின் நிழல்.

●

உதய சூரியன்
உடலுக்கு புத்துணர்ச்சி தருகிறது
நடைப்பயிற்சி.

●

வசந்த காலம்
வருடா வருடம் வருகின்றன
வலசைப் பறவைகள்.

**- நழீம் ஹனீபா, ஒலுவில் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திருப்போம் அனுதினம்.

**திருமதி. S. ஹஸீனா ஆதம்பாவா ஆசிரியை**
BA (Hons)

**தா**க்கத்திற்கு எதிரான மறுதாக்கம்
தரணியில் தாராளம்...
தந்தவர் தயவில்
தாழ்த்திடுவார் நிஜத்தில்...

சில்லென்ற சில தசாப்தங்கள்
சிதிலமாய் ஆன நினைவுகள்...
சிந்திய துளிகள் ரணமாய்
சிந்திக்க வைத்தன ஜகத்தில்...

வளர்த்த கடா மார்பில் மட்டுமல்ல
வாழ்க்கை முடியும் வரை...
வஞ்சனை நிறைந்த வதனத்திலும் பாயும்
வாழ்ந்தவர் நல்கிய மொழி நினைவில்...

துள்ளிய மாடு பொதி சுமக்கும்
துல்லியம் நிறைந்த முதுமொழி...
துன்பமாய் திசைமாறி
துருத்துமே தினமதில்...

காலம் ஒரு சுழல் சக்கரம்
கலைந்திடும் தினம் தினம்...
கரைந்திடும் பல யுகம்
காத்திருப்போம் அனுதினம்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைந்தழுது என்ன பயன்?

திருமதி. S. ஹஸீனா ஆதம்பாவா ஆசிரியை
BA (Hons)

ஜனனம் மறந்த மனிதம்
புரிதலற்ற கணங்கள்
நெடிதுயர்ந்த ரணங்கள்
வைராக்கியம் பூண்டவர்
விதைத்த வலி ஏராளம்...

கூடிழந்த கோகிலமாய்
கூட்டின்றி மனிதங்கள்
உறவை கலைக்கும் இடைவெளிகள்
வந்தே தொலைக்கும் துயரங்கள்
தந்த வலிகள் தாராளம்...

அன்பு கலைத்த சிதிலமாய்
வைரம் பாய்ச்சிய உரசல்கள்
மறக்கடிக்கும் பிறப்பினை
தந்தே தொடரும் மறுப்புகள்
அளித்த வலிகள் ஏகாந்தம்...

பிரித்தாளும் நெருக்குதல்கள்
பிரித்தே வைக்கும் ஜனிப்புகள்
பிறரை வதைக்கும் கொடூரங்கள்
பிரளும் நெறிமுறைகள்
கொடுத்த வலிகள் தொலைதூரம்...

கூட்டைச் சிதைத்த எத்தனிப்பு
கூக்குரலிடும் மறுதலிப்பு
கூப்பாடாய் செவியெங்கும்
கூட மறுக்கும் இருப்புகள்
நல்கிய வலிகள் நித்தியம்...

தொடராய் தொடரும் ரணங்கள்
மலடாய் மலரும் மகிழ்வு
கடலாய் கரையும் கனவு
நஞ்சாய் படரும் நினைவு
சுமந்த வலிகள் பாராளும்...

பிறப்பை குருடாக்கி
கவின் பாட்டும் வழித்தடங்கள்
எதிர்காலம் சிதைத்து
நிகழ்காலம் தொடரும் வக்கரிப்பு
அளித்த வலிகள் யதார்த்தம்...

நிஜம் தொலைத்த முகமூடியாய்...
வாழலாம்... மறையலாம்...
திரு தொலைக்கலாம் கூடலாம்
காலன் கவர்ந்த பின்பு
கரைந்தழுது என்ன பயன்?

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞனே எழுந்திரு!

இளைஞனே இன்னுமேன்
சுணக்கம் எழுந்திரு!
நன்னயம் நிறைத்திடும்
நற்பணிகள் நிறையவுண்டு!

நாளைய பொழுதினில்
நற்கனிகளைப் பறித்திட
நல்விதைகளை ஊன்றிடு!
நல்லெண்ண உரமிடு!

மூத்தோர்சொல் அமுதமென
முக்காலமும் உரைப்பதை
உணர்ந்திடும் நிலைவரும்!
முறைமைகள் பேணிடு!

பேயாய்த் துரத்திடும்
போதையை வெறுத்திடவே
யாவையும் வென்றிடுவாய்!
யௌவனமும் சிறந்திடும்!

வாழ்க்கையில் ஆயிரம்
தோல்விகள் தொடர்வதும்,
வசந்தங்கள் வளமிடுவதும்
வல்லவனின் வரங்களே!

வாய்ப்பினைப் பயன்படுத்தி
கடினமாய் உழைத்திடுநீ!
மகுடங்களின் மகிமைகளும்
உனைத்தேடி வந்திடுமே!

●

**- கிண்ணியா சபீனா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறமற்றுப் பார்த்தல்.

பார்க்கிறேன்
நிறமற்ற நிலையை
காற்று தீட்டிக் கொண்டிருக்கிறது
மழைக்கான நிறத்தை
வானில்

வர்ணமும் அடையாளம்தான்
வாங்காமல் பெயர்கிறது
பேரொலி

மறுத்தது
ஆழத்தின் வேண்டுதலை
தப்புகிறது
ஆரம்பத் துளிகளிடமிருந்து
மண்வாசனை
நிலம் பிடிங்கியிருந்தது
நிறத்தை

குலுக்கிப் பெற்ற
குறுங்கனிகளென
மழையெறிகிறதென்னில்
வர்ணங்களற்ற குதூகலங்களை
அதன் துளிகளால்

●

**- ஷியாம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளை.

- முகம்மட் றாபி -

நானிந்தக் கவிதையின்
கடைசிப்பகுதியை படிக்கின்றேன்,
அடுத்த பக்கம்
புதிய கவிதையொன்று என்னை
காத்திருக்கலாம்.

அதன் வரிகளெல்லாம்
சாரலும் ஈரமுமாய்
"மழை" பற்றியதாயிருக்கலாம்,
குடை பிடித்து வாசிக்க நேரலாம்.

அல்லது
வெயிலுறுஞ்சி வெளுத்த
தெருவில்
ஒரு வெற்றிலைக்காரியின்
பாதணி பற்றியதாயிருக்கலாம்,
புருவம் சுருங்க படிக்க நேரலாம்.

வைத்தியசாலையின்
நீண்டவரிசையில்
சத்தம் வழுவழுத்துப்போன
ஒரு முதுமையின் இருமல்
பற்றியதாய்...

வலிகள் சங்கிலிபோல் வந்து
வாழ்க்கைக்கு கிலி காட்டும்
வறுமை பற்றியதாய்...
கூட இருக்கலாம்.

தேன் போத்தலில் ஊறவைத்த
சொற்கள் கொண்டு
"முத்தம்" என்ற
தலைப்பிலிருக்கலாம்
மூச்சு முட்ட வாசிக்க கிடைக்கலாம்.

ஒரு பிரசவ வேதனையின்
ஒப்பாரியில்
உறவுகள் மகிழும்
முரண்பாடான கருவாயிருக்கலாம்.

அல்லது,
அடுத்த பக்கம்... பாதி
கிழிந்திருக்கலாம்,
அன்றில் அது அச்சிடப்படாத
வெற்றுப்பக்கமாய் எனை
ஏமாற்றலாம்
"நாளை"யைப் போல்.

நாளை... ஒரு புதையல்
உள்ளே நல்லதுமிருக்கலாம்
நாகமுமிருக்கலாம்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனைத் தேடி.

மதம் பிடித்தால்,
தூக்கியடிக்கும் யானைகள்
பசியெடுக்கிற போதெல்லாம்,
பெண் வேட்டையாடும் புலிகள்.
கூடவேயிருந்து,
குழி பறிக்கும் நரிகள்.
எல்லாமும்தான், பாதைகளில்
குறுக்கிடுகின்றன.

நாம் ஒளிரும் போதெல்லாம்,
எரிச்சலில் குரைக்கும் நாய்கள்.
நம் கையிலிருக்கிற வரை,
நம்மை வளைய வரும் பூனைகள்.
தூக்கியெறிவதைப் பொறுக்க,
வாசலில் காத்திருக்கும் காகங்கள்.
நம் உழைப்பைச் சுரண்டியே,
உண்டு கொழுக்கும் எலிகள்.

எத்தனை விலங்குகளை,
கடந்து நான் பயணிப்பது.
என்னைத் தற்காத்துக் கொள்ளலில்,
கவனமெடுத்தே,
கரைந்து போனதென் இளமை.

இந்தக் காட்டில்,
எங்கிருக்கிறான் மனிதன்.

●

**- சம்மாந்துறை மஷூறா.**
மருதமுனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிற்பம்.

செதுக்கி விடுகிறாய்
நீ! சிற்பங்களாய்...
உன் வார்த்தைகளை.

அதில்... லயித்தபடி...
ஏற்றம் பெறுகிறது
அடுத்தவர் மனங்கள்.

கவர்ச்சி என்ற ஒன்றை
கடைந் தெடுக்கிறது
உன் வார்த்தைகள்.

நிஜம் தழுவிய
உன்... கருவின் தழுவலில்
உயிரோட்டம் பிறந்து கலக்க...
உன் ஆணவமும், ஆளுமையும்
அதற்குள் தஞ்சமடைய...
அதில்... லயித்தே போகிறது
அதைக் கேட்போர் மனங்கள்.

கருக் கலைப்பற்ற
உன் படைப்பின் முன்னே...
சமூகக் கருக்கள்
அள்ளுண்டு கதறுகிறது...
பரவலாகி விட்டதே
எங்கும் நம்
ரகசியங்கள் என்று.

சுவை என்ற ஒன்று
நிஜத்தில் பிறக்கிறது...
மண்வாசனை சுமந்த
எழுத் தென்ற ஒன்றை
நாம்... சரியாய்...
பிரசவிக்கும் போது.

ஈற்றில்... சிற்பிகளும் சிற்பங்களும்
எழுதுகோலின் முன்னே தஞ்சமடைகிறது...
இலக்கிய வெற்றியே நம் வாழ்வாக!
●

**- எம். ஏ. மாஹிறா**
**(கலீறா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டாக்கனி.

அழகாய் இருக்கிறாய்
பயமாய் இருக்கிறது.

மௌனமாய் இருக்கிறாய்
அதுவும் எனக்குள்
பயமாய் இருக்கிறது.

அழுத்தமாய் இருக்கிறாய்
அதுவும் என்னை
வாட்டி வதைக்கிறது.

மொத்தமாய் எனக்குள் நீ!
பயத்தை விதைக்கிறாய்
அதில் தான் நானும்
உனைவிட்டும் வெகுதொலைவு
விலகிச் செல்கிறேன்.

எனக் கென்றும் நீ!
எட்டாக் கனி யென்று.

●

- எம். ஏ. மாஹிறா (கலீறா) -

# பொறுமை.

அடங்க மறுக்கிறது
பொறுமை...

ஆற முடியா
அவலம் தனில்...

நீ! என்னை...
தூக்கிப் போட்டு
மிதித்த கொடுமைதனை
நினைக்க... நினைக்க...

அடங்க மறுக்கிறது
எனக்குள் பொறுமை.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நந்தவனம்.

தனிமை
என்னோடிருந்தபோது
மனசு அவ்வாறிருக்கவில்லை
ஆறுதலெனக் கருதி
ஒரு பெண்ணை மணந்தேன் - பின்
நிம்மதிக்காக கடவுளிடம்
மண்றாட நேர்ந்தது.

மறுபடியும் நான்
முதல் நிலைக்குத்
திரும்பியபோது
விவாகம் ரத்தாகியது
கண்ணீர் வரும்வரை
சிரித்த சிலருக்காக
வேறு ஒரு பெண்ணை மணந்தேன்.

நந்தவனமாக வந்த
அவளுக்கும் எனக்குமிடையே
பல ஊர்கள் நதிகளாகி
ஓடுகின்றன.

●

**- முகம்மது றியால் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படித்தவற்றில் பிடித்தவை.

## ஒரு முத்தம் வேண்டும்.

ஜன்னல் வழி காற்று நுழைய
அசையும் திரைச்சீலை போல

கிளைகள் அசைய வீசும்
தென்றல் போல

கரை தொட்டு பின்னோக்கி செல்லும்
அலையின் நிசப்தம் போல

மழை பின்னே தளிர் விழும்
ஒரு துளி நீர் போல

நல் அறுவடை பின்னே வரம்பில்
அமரும் அவர் மனம் போல

குஞ்சிற்கு இறையூட்டி தன் சிறகை
விரித்தடிக்கும் பறவை போல

பசியாற மாரோடு ஒடுங்கும்
அந்த மழலை போல

ஒரு முத்தம் வேண்டும்.

ஆசுவாசமாய் உணர
முழுமையானதொரு
இளைப்பாறும் இதம் தரும்
இது போதும் எனும் அளவில்
இப்போதைக்கு எனக்கு

ஒரு முத்தம் வேண்டும்.

நுதல் தொடு அதுவே போதும்
ஆனால் கொஞ்சம் நீண்ட
ஈரமாய் ஒரு முத்தம் வேண்டும்.

ஆமாம்...
அன்பின் வழி
ஒரு முத்தம் மட்டும்
இப்போதைக்கு வேண்டும்.

●

- இமையி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் பாடல்.

தனிமைக் கடற்பரப்பில் பாடுகிறேன்
ஒரு பாடல்
கண்ணீரைத் துடைத்த பின்
நீ தந்த முத்தங்கள் தான் சொற்கள்
தலை சாய்த்து ரசிக்கிறாய்
சுதி பிசகாமல் நடைபோடுகிறது ராகம்
கண் மூடாமலோ
கை அசைக்காமலோ
ஒரு மிடறு மௌனத்தை விழுங்காமலோ
பாட முயற்சிக்கிறேன்.

கால வரையறைகளற்றது காதல் பாடல்
உயிரோடு கரை திரும்புகிறது படகு
பாடி முடித்ததும் கட்டியணைக்கிறாய்
இசைக்குழு
வாத்தியங்களை மூட்டை கட்டுவதை உணர்கிறேன்.

கடலின் மீது திரை விழுந்த பின்னும்
மறுபடி பாடக் கூச்சலிடுகின்றன அலைகள்
கைகொடுக்கின்றன நண்டுகள்
இன்னொரு ஊடல் கொள்ள
இன்னொரு பொழுதெதற்கு?
இன்னொரு முறை சீண்டு...

●

**- மா. காளிதாஸ்.**
(இந்தியா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழையின் தொடுகை.

உன்னை...!
நேற்றுத் தொட்டுப் போன
பட்டாம்பூச்சியின் பரிசத்தை...
கடலலை கொண்டு போய்
வானவில்லிடம் சேர்ப்பித்தது...
மழைத்தூறலோடு தொடங்கும்
அந்த வண்ணத் தொடுதல்கள் பெருமழையாய்...

அன்பின் நனைதலுக்குள் மூழ்க வைக்க...
பட்டு தெறிக்கும் துளிகளைத்
தாங்கி மயங்கிய பூவிலிருந்து விழும்
ஒற்றைத் துளியில் இன்னும்
உன் பரிசம் காண்கிறேன்...

கையோடு சேர்த்தெடுத்து
உச்சி மோர்ந்து தீர்த்தம்
ஆக்கினேன்..
விரல்களின் கதகதப்பில் இருந்து...
தப்பிப் போன துளிகளை
மீண்டும் கடலலை
வானவில்லிடம் சேர்ப்பிக்கும்...

என்னை நனைக்கும்
இன்னுமொரு மழைத்துளிக்காக
நானும் ஒரு பூவென.


●

**- பொலிகையூர் கோகிலா.**
(இந்தியா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிடைக்கப்பெற்ற கவிதைத் தொகுப்புகள்




ஓவியர், பாடகர், பாடலாசிரியர், கவிஞர் என பன்முகத் திறமை வாய்ந்த மருதமுனை பிரதேசத்தை சேர்ந்த ஓய்வுநிலை ஆசிரியர் **டீன் கபூர்** அவர்களின்

**வேரினிடை**

**(கவிதைத் தொகுப்பு - ஆங்கில மொழி பெயர்ப்புடன்)**

பக்கங்கள் : 120 பதிப்பு : 2023 விலை: ரூபா. 750/=
வெளியீடு : வெண்ணிலா வெளியீடு, மருதமுனை.
தொடர்பு : 362 A/3, ஹாஜியார் வீதி, மருதமுனை-06.
077 8850037



இலக்கிய உலகில் நன்கறியப்பட்ட கவிஞர், சிறுகதை எழுத்தாளர் மருதமுனை பிரதேசத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற ஓய்வுநிலை அதிபர் மருதூர் கொத்தன் **வி. எம். இஸ்மாயீல்** அவர்களின்

**மோகனம்**

**(மருதூர்கொத்தன் கவிதைகள்)**

பக்கங்கள் : 200 பதிப்பு : 2023
வெளியீடு : மருதூர் கொத்தன் அறக்கட்டளை, மருதமுனை.
தொடர்பு : 517, ஸம் ஸம் வீதி, மருதமுனை-03.
ariff.ismail64@gmail.com




கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக இலக்கிய பணி செய்துவரும் ஏறாவூர் பிரதேசத்தைச் சேர்ந்த கவிஞர் மௌலவி **மருதூர் ஜமால்தீன்** அவர்களின்

**“கொறோனா”**

**(குறுங்காவியம்)**

பக்கங்கள் : 16 பதிப்பு : 2023 விலை: ரூபா. 200/=
வெளியீடு : ஹனிமூன் கலா மன்றம், ஏறாவூர்.
தொடர்பு : இல. 116, K. P. புதிய வீதி, ஏறாவூர்-02.
075 2798958



புதிய தலைமுறைக் கவிஞர்கள் மத்தியில் சுட்டிக்காட்டத்தக்கவரும் மருதமுனை பிரதேசத்தைச் சேர்ந்தவருமான **ஏ. எம். முனாஸ்** அவர்களின்

**புதிய நெருடல்கள்**

**(கவிதைத் தொகுப்பு)**

பக்கங்கள் : 46 பதிப்பு: 2ஆம் பதிப்பு - 2022
வெளியீடு : புலவர்மணி ஆ. மு. ஷரிபுத்தீன் கலை இலக்கிய மன்றம், மருதமுனை.
தொடர்பு : 95, எல்லை வீதி, பெரியநீலாவணை-03, மருதமுனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தா  விபரம்



**ஒரு வருடத்திற்கான ஆண்டுச் சந்தா ரூபா. 600/= மட்டுமே.**

இலங்கை வங்கி **6106068** (எஸ். ஏ. அப்துல் கப்பார்) என்ற கணக்கிலக்கத்திற்கு ரூபா. **600/=** மட்டும் வைப்பிலிட்டு, அதன் பற்றுச் சீட்டின் நிழற்பிரதியை உங்களது தபால் முகவரியுடன் எமது வட்ஸ்அப் இலக்கத்திற்கு அல்லது மின்னஞ்சலுக்கு அல்லது தபால் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

தொடர்ந்து நான்கு **வெண்ணிலா** காலாண்டிதழ்கள் தபால் மூலம் உங்கள் வீடு வந்து சேரும்.

வட்ஸ்அப் : **0776968671**

மின்னஞ்சல் : vennilakavithaimanjari@gmail.com

முகவரி : ஆசிரியர் - வெண்ணிலா கவிதை மஞ்சரி,
378/2, ஸம் ஸம் வீதி, மருதமுனை-03 #32314



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை மாநகரில் (அமானா வங்கி முன்பாக) ...

- நேரடியாக சகலவிதமான விமான பயண டிக்கற்களை உடனடியாக பெற்றுக் கொள்வதோடு
- Budget & Economy வெளிநாட்டு சுற்றுலா ஏற்பாடுகள் (India, Maldives, Thailand & Europe)
- வெளிநாடு ஒன்றிற்கு குடிபெயர்வதற்கான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள்
- Other Air ticketing related services
- Hajj & Umra Arangements
- Visa related Assistances
- Student Visa Guidance

IATA

Since 1986

## mH Travels & Tours

*Ur Travel & Progress Companion*

No. 9, Main Street, Kalmunai. Hotline : 077 067 3062
Head Office : 323, Maccamady Road, Maruthamunai - 03. Tel : 067 222 9486
mhtravelsntours@gmail.com Tel : 067 205 9434, 075 808 9968

## Business & Tax consultation in the Heart of Kalmunai Town...

- Tax Planning
- Income Tax
- VAT / SVAT
- NBT / ESC (old)
- CGT
- PAYE / APIT (Employer)
- Agribusiness consultation
- Audit
- Accounts Preparation
- IAS / IFRS, LKAS / SLFRS Consultancy
- Book Keeping
- Outsourcing services
- POS Solution
- Cooperate Secretarial Services


## elite

**Biz & Tax Consultancy**

No. 10, Main Street, Kalmunai. M : 077 067 3062
Tel : 067 205 9434, info@elitetaxcon.com, www.elitetaxcon.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இச் சஞ்சிகை, இல. 378/2, ஸம் ஸம் வீதி, மருதமுனை-03, டிஜிட்டல் இன்ஃபர்மேஷன் சிஸ்டம் (DIS) நிறுவனத்தினரால் 289, பிரதான வீதி, மருதமுனை Jesa Grafix இல் அச்சிடப்பட்டு ஒக்டோபர் 2023இல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org